# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்

J A M A K K A R A N

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 5**

**MAY 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**



கர்த்தருக்கு அன்பானவர்களே

உங்களுக்கு சுகமும், சமாதானமும் பாதுகாப்பும் கர்த்தர் அருள்வாராக.

கடந்த மார்ச் மாதம் முதல் **கொரோனா கிருமியால்** உண்டான பாதிப்பு, அழிவு இன்னும் நீங்கினபாடில்லை. அரசாங்க அறிவிப்பு ஒவ்வொரு வாரமும் வித்தியாசமாக காணப்படுகிறது. எப்போது இந்த வியாதி கிருமி நீங்கும் என்று உலகத்தின் எந்த நாடும் திட்டமாக அறிவிக்க முடியவில்லை.

பல நாடுகள் விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்து மனிதனை உருவாக்கும் உயரத்துக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட நிலையில் இந்த சாதாரண கிருமியை பற்றிய ஆரம்பம் – முடிவு ஆகியவற்றை அறிய முடியவில்லை. அனைத்து உலக ஞானிகளின் மூளை அறிவுக்கும் எட்டாத ஆபத்தாக இருக்கிறது. விஞ்ஞானிகளும் ஞானிகளும் எங்கள் அறிவுக்கு எட்டாத விஷயமாக இருக்கிறது என்று இப்போது ஒத்துக்கொண்டார்கள்.

எங்கள் மனுஷ மூளைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி உண்டு. பரம ஞானி பரம வைத்தியன் ஒருவர் உண்டு என்று இவர்கள் ஒத்துக்கொண்டு, **அண்டசராசரங்களையும்** உண்டாக்கின தெய்வம் ஒருவர் உண்டு என்றும். அந்த ஒருவர் **இயேசு கிறிஸ்து** என்று உணர்ந்து உலக தலைவர்களும் மக்களும் அவரை நோக்கி கை ஏந்தும் போது மட்டுமே இந்த கொடிய கிருமியின் வாதைக்கு ஒரு முடிவு வரும்.

# MAY - 2020

ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் ஒன்றாக இணைந்தபோது அவர்கள் இணைந்து உண்டாக்கிய பல ஷரத்துகளில் ஒன்று, ஐக்கிய நாட்டில் எந்த ஒரு நாட்டுக்காகாவது ஒரு பிரச்சனை வந்தால் ஐக்கிய நாடுகளில் உள்ள அனைவரும் இணைந்து ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என்பதாகும். ஆனால் ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் அனைத்திலும் இந்த **கொரோனா கிருமி** புகுந்து விளையாடிக்கொண்டிருக்கிறதே? யாரும் யாருக்கும் உதவ முடியாத சூழ்நிலை உண்டாக்கிவிட்டதால் எந்த நாடும் யாருக்கும் உதவ முடியவில்லை.

ஐரோப்பிய ஐக்கிய நாடுகளின் ஒன்றான இத்தாலி தேசத்தில் கொரோனா கிருமியின் தாக்கம் அதிகமாகி மரண எண்ணிக்கை உலக நாடுகளைவிட அதிகமானது. **இத்தாலி நாட்டு பிரதமர்** உலக நாடுகளை பார்த்து எங்களுக்கு உதவி செய்து எங்களை காப்பாற்றுங்கள் என்று கூறினார். தன் தேச மக்களின் **மரண எண்ணிக்கையை** பார்த்து அவர் **TV**யில் கண்ணீர்விட்டு அழுதது உலக நாடுகளை உலுக்கியது. ஆனால் அனறைய சூழ்நிலையில் உதவிசெய்ய முடியாமல் கைவிரித்துவிட்டனர்.

☐ **அமெரிக்காவின** ஆணவமும் ஒழிந்து உலகத்திலேயே மிக அதிக சாவு எண்ணிக்கை அமெரிக்காவின் **நியூயார்க்** மாநிலத்தில்தான் ஏகப்பட்டது. குறிப்பாக **வயது முதிர்ந்தோர்,** இல்லத்தில் உள்ள வயதானவர்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் சொத்துப்போனார்கள்.

☐ **சீனாவில்** அதிக எண்ணிக்கையில் மக்கள் மரித்து, பிறகு எப்படியோ சகஜ நிலைக்கு திரும்பிய சமயத்தில் மறுபடியும் **கொரேனாவின் ஆட்டம்** சீனாவில் மற்ற பகுதியில் ஆரம்பித்து விட்டது.

☐ உலகின் ஒவ்வொரு தேசத்திலும் **கர்த்தரை கோபப்படுத்தின** சங்கதிகள் நிறைய உண்டு. இப்படிதான் உலக ஆரம்பத்தில் மக்கள் இஷ்டம்போல் வாழ்ந்து தங்களை கெடுத்துக்கொண்டு **கர்த்தரின் மனதை துக்கப்படுத்தினார்கள்** ஆதி. 6:6ல் கூறியபடி இந்த மனிதர்களை எதற்காக உண்டாக்கினேனோ என்று கர்த்தர் மிகவும் துக்கப்பட்டாராம்.

## முதல் உலக அழிவு

கர்த்தரின் துக்கம் **கோபமாக மாறி முழு உலகத்தையும்** தண்ணீரினால் மூழ்கடித்து **கர்த்தர் மனித இனத்தையே அழித்தார்.** தன்னை நேசித்து தனக்கு பயந்து ஜீவித்த **ஒரே ஒரு குடும்பத்தை** மட்டும் கர்த்தர் **முதல் உலக அழிவிலிருந்து** காப்பாற்றினார்.

மறுபடியும் மக்கள் பலுகி பெருகினார்கள். தொடர்ந்து இன்று வரை மக்கள் மறுபடியும் மனம் கடினப்பட்டு கர்த்தரை மேலும் மேலும் **வேதனைப்படுத்திக்கொண்டேயிருக்கிறார்கள். கர்த்தர் மனிதனோடு எப்போதும் போராடமாட்டார்** என்று வேதம் எச்சரிக்கிறது.

வேதத்தில் பலவித காலங்களைப்பற்றி கூறியுள்ளது

1) வேத **சரித்திரம்** எழுத ஆரம்பித்ததற்கு முந்தைய காலம்
2) **மனசாட்சியின் காலம்**
3) **நியாயப் பிரமாணக் காலம்**
4) **நியாயாதிபதிகளின் காலம்**
5) **இராஜாக்களின் காலம்**

6) **தீர்க்கதரிசிகளின் காலம்**

7) இயேசு கிறிஸ்து பிறக்கும் காலம் வரை விவரம் எதுவும் அறியாத **இருண்ட காலம்**

8) இயேசு கிறிஸ்துவின் முதலாம் **வருகையின் காலம் (கிறிஸ்துவின் பிறப்பு)**

9) **கிருபையின் காலம்** இயேசு கிறிஸ்து மனிதருக்கு பிதா சொல்ல சொன்ன அனைத்து ஆலோசனைகளையும் கூறி உலகத்தின் **முடிவைக் குறித்தும்** அதன் **அடையாளங்களைக் குறித்து** (மத். 24, மாற். 13, லூக் 21) விவரித்து கூறி முடித்து **பிதா தன்னை அனுப்பிய** நோக்கத்தை **சிலுவையில்** அறையப்பட்டு **இரத்தம்** சிந்தி மரித்து **பிதாவின் திட்டத்தை** நிறைவேற்றி முடித்தார். **மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து** பரமேறி பரலோகம் போகும்முன் தான் பூமிக்கு திரும்ப வருவேன் என்று கூறி பரலோகம் சென்றார். புதிய உடன்படிக்கையின்படி புதிய ஏற்பாட்டு **சபையை உருவாக்கி** அந்த சபை எப்படியிருக்க வேண்டும் என்ற ஆலோசனைகளை சீஷர்களிடம் கூறி தன்னுடைய தான் **இரண்டாம் வருகையின்போது சபையை** எடுத்துக்கொண்டு போக வருவேன் என்றார். அப்போதும் **முழு சபையும்** எடுக்கமாட்டேன். அதில் **மனம் திரும்பி** இரட்சிக்கப்பட்ட கர்த்தரின் **வசனத்தின்படி** சாட்சியோடும் ஆயத்தத்தோடும் இருப்பவர்களை **மட்டும்** அழைத்துபோவேன். சபையில் உள்ள **மற்றவர்கள் யாவரும் கைவிடப்பட்டவர்களாவார்கள்** என்று தன் சீஷர்களுக்கு ஆலோசனைகளை கூறியதோடு தனது இரண்டாம்வருகைக்கு முன் **பரிசுத்த ஆவியானவரை** தனக்கு பதிலாக உலகத்தில் அனுப்பி சபையில் இரட்சிக்கப்பட்டு **மனம் திரும்பினவர்கள்** அத்தனை **பேர்களுக்குள்ளும் வாசம் செய்யும் ஏற்பாடாக** தாம் வாக்களித்ததின்படி பரிசுத்த பரிசுத்தாவியானரை அனுப்பினார். அந்த பரிசுத்த ஆவியானவர் சபை விசுவாசிகளை **சகல சத்தியத்துக்குள்ளும் நடத்துவார்** என்று கூறி பரமேறி பரலோகம் சென்றார். அவர் வாக்களித்தபடியே. (அப். 1:2, எபே. 1:13) ஆவியானவர் அனுப்பப்பட்டார்.

- ☐ இப்போது நாம் இருப்பது **கிருபையின் காலமாகும்.** இந்த **கிருபையின் காலத்தை** குறித்து ஊழியர்களால் நாம் போதிக்கப்பட்டும். கிறிஸ்தவ சபை விசுவாசிகளும் ஊழியர்களும் மறுபடியும் மறுபடியும் பல விதத்தில் கர்த்தரை கோபப்படுத்தினார்கள்.

கர்த்தர் தம் மக்களை எப்படியெல்லாம் **நேசித்தார்.** எப்படியெல்லாம் வழிநடத்தினார் என்பதைக்குறித்து **புறமதஸ்தர்களுக்கு** தெரியாது. ஆனால் வேதத்தை அறிந்த **கிறிஸ்தவ சபை** மக்களுக்கு நன்றாகதெரியும். அப்படிப்பட்ட கிறிஸ்தவ சபைக்கு கர்த்தர் கிருபையாக அளித்த **வேத வசனத்தின்படி** நடக்காமல், சபைகள் தங்களுக்குள்ளே **பல பிரிவினைகளை** உருவாக்கி, அவரவர்கள் தங்களுக்கென்று தனி **உபதேசங்களை** உருவாக்கி **வசனத்தை விட்டு வழி விலகி** , **தலைமை** பாஸ்டர்கள், **தலைமை** மாடரேட்டர்கள், **பிஷப்மார்கள்,** ஆயர்கள், உபதேசியார்கள், சபை ஜனங்கள் அத்தனைபேரும் பண ஆசைகொண்டு சபையில் **பதவிக்காக** சண்டைபோட்டு இயேசுவின் வசனத்துக்கு கீழ்படியாமல் வழி விலகி கர்த்தரை மறுபடியும் மறுபடியும் கோபப்படுத்தினார்கள்.

**கர்த்தரின் கோபம்** காரணமாக கடந்த சில காலங்களாக **சுனாமி,** பூமி அதிர்ச்சி, **வெள்ளப்பெருக்கு** இப்படி வாதைகள் பல ரூபத்தில் வந்து மக்களை தாங்கொன்னா துயரத்தில் ஆழத்தியது என்றாலும் மக்கள் மனம் தெய்வத்தை தேடவில்லை. **கிறிஸ்தவர்கள்** வசனத்தின்படி நடக்கவில்லை. இப்போது கொரோனா தொற்று கிருமியின் காரணமாக நாம் யாவரும் **வீட்டைவிட்டு**

வெளியே தலை காட்ட முடியாமல். **கடைகள்** அடைக்கப்பட்டு கம்பெனிகள், **தொழில் சாலைகள்** அனைத்தும் மூடப்பட்டு **கோடிக்கணக்கான மக்கள்** வேலை இழந்து பலர் **தொழில்** செய்ய முடியாமல், **கூலி** வேலைகூட செய்ய வழியில்லாமல் **பட்டினியால்** மக்கள் மரித்துகொண்டிருக்கிறார்கள். உலகெங்கும் **மரண பயம்** காரணமாக செயலிழந்து நிற்கிறார்கள். உருவம் தெரியாத **கொரோனா வைரஸ் என்ற கிருமி** மூலமாக கர்த்தர் **வாதையை** முழு உலகத்துக்குள்ளும் அனுமதித்தார். இப்போதும் **மக்கள் தங்களை மாற்றிக்கொள்ள விருப்பம் இல்லை.** தங்கள் செய்கைகளை குறித்து **தற்பரிசோதனை** செய்யாமல் **உயிருக்கு பயந்துதான்** இப்போதும் மக்கள் கூடி கூடி பல இடங்களில் ஜெபிக்கிறார்கள். கதறி அழுது ஜெபிக்கிறார்கள். ஆனால் அதில் மனம் திரும்பின அனுபவத்தோடு ஜெபிப்பவர் மிக குறைவு.

**சத்தியம் TV**யில் பல இடங்களில் நடக்கும் ஜெப கூட்டத்தையும், அழுகிறவர்களையும் தினசரி காலையும் மாலையும் காட்டுகிறார்கள். ஜெப கூட்டத்தை **தலைமை ஏற்று நடத்துகிற நபர்,** மற்றும் ஊழியக்காரர்கள் அந்த ஜெப கூட்டத்தில் ஜெபம் துடங்கும்போது முதலில் **மனந்திரும்ப வேண்டும்** என்ற **ஜெப குறிப்பை** வைக்கிறார். ஆனால் அந்த **ஜெபத்தை** நடத்தும் **அவரோ** தன் **பொய் தீர்க்கதரிசனம் கூறுவதை** நிறுத்த மறுக்கிறாரே! **HIV.**, எயிட்ஸ் வியாதியை **சர்க்கரை வியாதியை,** மனநோயை இயேசு சுகமாக்குவதை நான் காண்கிறேன் என்கிறார். ஆனால் **யாரும்** எந்த சுகமும் **பெற்றதாக சாட்சியில்லை. மேடையில்** இவர்கள் ஜெபத்தில் **பெயர் சொல்லி** அழைத்த சாட்சிகள் எல்லாம் **பொய் சாட்சிகளாக** இருக்கிறதே!

### பொய்யான அன்னிய பாஷையும் – ஜெபத்தில் பொய்யாய் பெயர் கூறும் ஏமாற்றுகளையும் TRANCE என்ற சினிமா படத்தில் இப்போது காட்டுகிறார்கள்.

**கேரளத்தில் TRANCE** (டிரான்ஸ்) என்ற பெயரில் ஒரு சினிமா வெளியிட்டிருக்கிறார்கள். அது கேரளா முழுவதும் சக்கைபோடு போடுகிறது. அதில் **ஏமாற்று கூட்டம்** ஒன்று ஒரு ஏழை முஸ்லிம் வாலிபனுக்கு **பணத்தாசை காட்டி அவனை சுகமளிக்கும் கிறிஸ்தவனாக நடிக்க அவனுக்கு அன்னிய பாஷை** பேச கற்றுக்கொடுத்து, கூட்டத்தில் **பெயர் சொல்லி அழைக்கவும்** அந்த நபரின் **பிரச்சனைகளையும்** மைக்கில் கூறி அவர்களை மேடைக்கும் அழைக்கிறார். அவரை சாட்சி சொல்ல வைக்கிறார்கள். அவர்களை அழைத்து அவர்கள்மேல் **கைவைத்து ஜெபித்து** அவர்களை சத்தமாக **அல்லேலூயா** கூறச்சொல்லி அவர் தலையில் **கை வைத்தவுடன்** அவர் **கீழே விழுவது,** நடிக்கும் அந்த ஊழியர் கூட்டத்தை நோக்கி **அவர் பாம்பு சீருவது** போல் ஸ் ஸ் ஸ் என்று **சத்தம்மிட்டவுடன் கூட்டமே சரிந்து விழுவது, அக்கினி அபிஷேகம்** இறங்குகிறது என்று கூறியவுடன் தீ **பிழம்புபோல்** ஒன்று கூட்டத்தின் மீது இறங்குவதுபோல் விசேஷ **லைட் ஏற்பாடுகளை** செய்து தத்ரூபமாக அதே கூட்டத்தில் காட்டுகிறார்கள். **மேடையின்** அருகே **மறைவான** இடத்தில் ஒரு **கன்ட்ரோல் ரூமில்** வைத்து அவைகளை இயக்குகிறார்கள். மேலும் **ஜெப எண்ணையை** பாட்டிலில் அடைத்து அவைகளையும் பல லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்து, அந்த ஏழை கதாநாயகனை **பெரும் கோடீஸ்வரன்** ஆக்குகிறார்கள், கூட்டத்தில் வைக்கப்பட்ட **காணிக்கை** பெட்டியிலிருந்து எடுத்த பணத்தில் பல ஊர்களில் **எஸ்டேட்களும், பங்களாக்களையும்** வாங்கியதால் **வருமானவரி அதிகாரிகள்** அந்த சினிமா கதாநாயகனை விசாரனைக்கு அழைத்து செல்கிறார்கள். அவர்கள் கேள்விகளுக்கு அந்த கதாநாயகனை உருவாக்கிய அந்த ஏமாற்று கூட்டம் கூறும் உண்மை பதில் என்னவெனில் இன்று **உலகம்**

**முழுவதும்** நடக்கும் பெரிய மோசடி வியாபாரமே **கிறிஸ்தவர்கள் நடத்தும் சுகமளிக்கும் கூட்டமாகும்** என்கிறார்கள்.




**கருப்பு** பணத்தை **வெள்ளை** பணமாக மாற்ற கிருஸ்தவ **சுகமளிக்கும் ஊழியர்கள்** கூட்டத்தில் சேகரிக்கும் **காணிக்கை** மிகவும் உதவியாக இருக்கிறது. ஆகவே குருக்கு வழியில் **கோடீஸ்வரர்களாகமாற** சுகமளிக்கும் கூட்டத்தில் **ஊழிய நுனுக்கத்தை** கற்றுக்கொண்டாதாக அறிவிக்கிறார்கள். ஏமாற்று கூட்டத்தினர் கூறியபடி **சுகமளிக்கும் ஊழியத்தை** செயல்படுத்த இந்த கூட்டம் தெரிந்தெடுத்த வாலிபன்தான் இந்த படத்தின் கதா நாயகன்.

இந்த சினிமா கிறிஸ்தவ உபதேசத்தையும், சுகமளிக்கும் ஊழியத்தை செய்ய கர்த்தர்கொடுத்த வசனத்தையும் கொச்சைப்படுத்துவதாக அமைகிறது. இந்த சினிமாவில் இப்போது நடைமுறையில் நடக்கும் மற்றொரு **உண்மையையும்** காட்டுகிறார்கள். அந்த கதாநாயகனுக்கு **அன்னிய பாஷை** கற்றுக்கொடுக்கவும், குறிப்பிட்ட **வேத வசனங்களை** மனப்பாடமாக கூறவும் அவைகளை சொல்லிக் கொடுக்க ஒரு **பெந்தேகோஸ்தே** சபை பாஸ்டர்தான் உபயோகிக்கப்படுகிறார். மேலும் சகோ. D.G.S. தினகரன், மோகன் C. லாசரஸ் **போன்ற சில ஊழியர்களின்** பிரசங்கத்தையும் அவர்களின் ஊழியத்தில் எடுத்த **வீடியோக்களை** ஒரு மலைபிரதேசத்தில் மறைவான தனி **பங்களாவில்** வைத்து அந்த கதாநாயகனுக்கு அவைகளை போட்டு காண்பித்து மனதில் இப்போதைய ஊழியர்களின் பிரசங்க முறைகளை **பதிய வைக்கிறார்கள்.** அந்த வீடியோவில் **பிரசங்கிப்பவரின் முகத்தை** மறைத்து அந்த வீடியோவை கதாநாயகனுக்கு திரும்ப திரும்ப போட்டுக் காட்டி அவனை **அல்லேலூயா ! ஆமென்** என்ற வார்த்தைகளை காது கிழியும் வகையில் மிக சத்தமாக அடிக்கடி **கூற பயிற்சி கொடுத்து** அவனை தயார் செய்தர்கள் ஒருநாள் மிக பெரிய **விளம்பரத்தோடு** ஒரு ஊரில் பிரம்மாண்டமான **மேடை** அமைத்து அந்த வாலிபனை வைத்து **சுகமளிக்கும்** கூட்டத்தை **அரங்கேற்றுகிறார்கள்.** அது வெற்றிகரமாக அமைந்தது. அந்த பொய் தீர்க்கதரிசனத்தின்படி நடந்ததாக பல சாட்சிகளை மேடை ஏற்றுகிறார்கள். குறுகிய நாட்களில் இந்த கதாநாயகன் உலக பிரசித்திபெற்ற சுகமளிக்கும் அற்புத ஊழியனாக உருவெடுக்கிறான்.

அவன் **வெளி நாடுகளிலும்** பிரசித்தபடுத்தப்படுகிறான். **தனி விமானம்** வாங்கும் அளவு பணம் சேர்த்த கதையும் அந்த சினிமாவில் காட்டப்படுகிறது, முடிவில் **கதாநாயகன்** தன்னை **இயேசுவுக்கு சமமாக** மக்களை நம்பவைக்கிறான் சினிமாவின் முடிவில் ஒரு ஆள் **தன் மகள்** வியாதிபட்டபோது அவளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகாமல் ஒலு கடவுளைப்போல நம்பும் அந்த நடிக்கவந்த ஊழியக்காரனை நம்பி அவர் என் மகளை தொட்டால் எழுந்து நடப்பாள் என்று மிகவும்

நம்புகிறான். குடும்பத்தினர் அழுதும், ஆஸ்பத்திரிக்கு **மகளை** கொண்டுபோகாமல் திரும் திரும்ப **அந்த பிரதர்** என் **மகளை தொட்டு சுகமாக்குவார்** என்று நம்பி அவர் பல ஊர்களில் பிரசங்கிக்கும் எல்லா கூட்டங்களுக்கும் மகளையும் தூக்கி சென்றும் அவளுக்கு சுகம் கிடைக்காமல் அவள் இறந்து போனாள்.

இந்த சோக நிகழ்ச்சிதான் **கதாநாயகனை** மனம் திருந்த வைத்தது , அதன்பின் அவன் அனைத்து TV **சேனல் நிருபர்களையும்** அழைத்து **தான் பேசிய அன்னிய பாஷை** பொய், நான் சொன்ன **தீர்க்க தரிசனம் பொய்,** சில **கார்ப்பரேட் முதலாளிகளாலும்** கள்ள கிறிஸ்தவ **ஊழியர்களாலும்** நான் வஞ்ஜிக்கப்பட்டேன் என்று பகிரங்கமாக அறிக்கையிட்டான். இதை கேட்கும் அனைவரும் **என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்** என்று கூறி அவனாவே போலீஸில் சரண் அடைகிறான். 2 மணி நேரம் ஓடும் இந்த சினிமாவை **கேரளாவில்** ஒரு C.S.I. சபை ஆயருடன் நான் **கொட்டாரகரை** என்ற ஊரிலிருந்து **கோட்டயம்** என்ற ஊர் போய் சேரும் வரை அந்த ஆயர் என்னை தன் வாட்ஸ் அப்பில் அந்த சினிமாவை பார்க்க வைத்தார் அந்த சினிமாவை பார்த்த **என் மனம் வேதனையில்** சோர்ந்து போனது. **கிறிஸ்தவ நாமம்** சுகமளிக்கும் போலி கிறிஸ்தவ **ஊழியர்களால்** எவ்வளவாய் தூஷிக்கப்படுகிறது என்று வேதனைப்பட்டேன்.

சகோ. மோகன் C. லாசரஸ் பற்றி இந்த கட்டுரை எழுதும் போது இந்த குறிப்பிட்ட **சினிமா விவரம்** வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்று என்னி வெளியிடுகிறேன். காரணம் இப்போதும் இப்படிப்பட்ட பொய்யான **சுகமளிக்கும் ஊழியங்கள்** எல்லா இடங்களிலும் நடைபெறுகிறதே! அதை தானே இவர்கள் அப்படியே **சினிமா படம்** எடுத்து வெளியிட்டுள்ளார்கள். அதனால்தான் **கிறிஸ்தவர்கள்** மிக அதிகமாக வாழும் **கேரளாவில்** உள்ள எந்த கிறிஸ்தவ சபைகளும், ஊழியர்களும் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. திருடனுக்கு தேள் கொட்டியதைபபோல என்ற பழமொழிதான் என் ஞாபகத்தில் வருகிறது. அந்த சினிமாவில் குறிப்பிட்ட **சம்பவங்கள் பொய்யாய்** இருந்திருக்குமானால் அந்த சினிமாவையே **தடை** செய்திருப்பார்களே!

**பரிசுத்தாவியானவரை** தங்கள் பொய்யான **அன்னிய பாஷை** மூலமாக காட்ட இப்போதுள்ள **பெந்தேகோஸ்தே சபையினரும் மாயமாலம்** செய்து கர்த்தரை கோபப்படுத்துகிறார்களே! என்பதற்காகவே **இந்த சினிமாவை** இங்கு குறிப்பிட்டேன்.

## சத்தியம் TVயில் மோகன் லாசரஸ் நடத்திய உபவாச ஜெபம்

அப்படியே **TV**யில் நடந்த **உபவாச ஜெபத்தில்** இவர்களின் **அழுகையை TV**யில் பலர் பார்த்து ஏமாந்து கொண்டிருக்கிறார்களே! இவர்கள் கெட்டதோடு **TV**யை பார்த்துக்கொண்டிருக்கிற அனைவரையும் மற்ற சபையினரையும் **குறிப்பாக** மற்ற **மதத்தினரையும்** நோக்கி **அன்னிய பாஷையில்** பேசுங்கள் என்று மோகன் **C.** லாசரஸ் கூறி மக்களை **தவறான வழியில்** நடத்தினாரே! ஆண்டவருக்கு **கோபம்** வராமல் இருக்குமா? இவர்கள் ஜெபத்தில் கொரோனா கிருமி எப்படி அழிந்துபோகும்.

**சபைகள் எல்லாம் பூட்டப்பட்டபின்** இனி ஆராதனை நடக்குமா? என்ற சூழ்நிலை உருவானபின்தான் இவருக்கு ஞானோதயம் ஏற்பட்டுள்ளது. இப்போது **ஆசீர்வாத தட்டையும், அசனம் கூடுகையும்** தேவனுக்கு விரோதமான **பாவம்** என்கிறார்கள். அதனால்தான் இந்த **கொரேனா** வாதை ஏற்பட்டது என்கிறார். **சபைகள் பூட்டப்படும்** முன் **இவை** தேவனுக்கு **விரோதமான பாவம்** என்று பிரசங்கிக்க இந்த **TV** யில் பேசும் **பொய் தீர்க்கதரிசிகளுக்கு** தைரியமில்லாது போனது ஏன் ?

இப்போது **பாவத்தை** குறித்த பிரசங்கத்தையும், **வரதட்சனை** பாவம், **வரதட்சனை** வாங்கினால் **சாபம்** என்று இப்போது இவர்கள் பிரசங்கிக்க தைரியம் எப்படி வந்தது ?

காரணம் இனி CSI சபைகளோ, **லூத்தரன்** சபைகளோ **பெந்தேகோஸ்தே** சபைகளோ (துங்களை) அழைக்க மாட்டார்கள் என்று இவர்கள் விளங்கிக்கொண்டார்கள். இனி CSI இனி அவர்கள் சபைகளில் பிரசங்கித்து **காணிக்கைபெற** வேண்டிய அவசியம் இவர்களுக்கு இல்லை, காரணம் உபதேச வித்தியாசமுள்ள அத்தனை சபை மக்களையும் தான் **ஜெபம் நடத்தும்** அல்லது **கூட்டம் நடத்தும்** இடத்துக்கு அவர்களாகவே வந்துசேரும் அளவு **பொய் தீர்க்கதரிசன கவர்ச்சி** மக்களை கவர்ந்து காந்தம்போல் இழுக்க இவர்கள் ஞானமாய் ஏற்பாடுகளை செய்துவிட்டார்கள்.

ஆகவே வாசகர்கள் இனியாவது விழித்துகொண்டு அவரவர்கள் சபையில் அல்லது அவரவர்கள் குடியிருக்கும் இடத்திலேயே கூடி ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

பிசாசு வஞ்ஜிக்கிறவன் என்று கர்த்தர் முன்பே நமக்கு அறிவித்துவிட்டார். எந்தவித வஞ்ஜனை வலையிலும் இப்படிப்பட்ட **ஊழியர்களின்** கவர்ச்சியிலும் விழுந்துவிடாதபடி இருக்க மாற்கு 16:17லிருந்து முடிவுவரை வாசித்து தெளிவுபெறுங்கள். உன் விசுவாசம் உன்னை இரட்சிக்கும். உங்களை ஜெபத்தாலும் நீங்கள் சுகம் பெற முடியும் என்பதை விசுவாசியுங்கள். (சங். 107:20)

☐ **யோவேல்** தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் 2ம் அதிகாரத்தில் **மக்களை கூடி வரசெய்து உபவாச நாளை** நியமித்து **சபையில் தான் அழுது** ஜெபிக்க கர்த்தர் கட்டளையிடுகிறார். **பொது இடத்தில் அல்ல.** TVயில் **அல்ல** வெளி **மைதானத்தில் அல்ல. அவரவர்கள் சபையில்** அந்த **ஜெபங்கள் நடைபெற வேண்டும்**. சபை அப்படி ஏற்பாடு செய்யாவிட்டால் **அது சரியான சபை அல்ல,** அப்படி வசன அடிப்படையில் சபை சரியாக நடத்தப்படவில்லையானால் **சபை மூப்பர்களுக்கு** முதல் தண்டனையும் அதன்பிறகு சபை **பாஸ்டருக்கும்** அதன்பிறகு **சபை மக்களும்** தணடிக்கப்படுவார்கள். எசே. 9:4,6 எசே. 22:30

**அறிந்திருந்தும் தவறு செய்கிறவன்** ( சபை பாஸ்டரோ, ஊழியரோ, சபை மக்களோ) அனேக அடிகள் **அடிக்கப்படுவா**ன் என்று வேதம் எச்சரிக்கிறது.

உங்களுக்குக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

டாக்டர் **புஷ்பராஜ்**

# ONLINE BANKING (NEFT)

## Dr. M.G.E. PUSHPARAJ, SALEM - 636 005. INDIA

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# நாலுமாவடி **மோகன் C. லாசரஸ்** அவர்களின் வீழ்ச்சி



தமிழ்நாட்டில் கிறிஸ்தவர்கள் மத்தியில் சகோ. **D.G.S. தினகரனுக்கு** பிறகு மக்கள் அதிகம் தேடும் ஊழியர் சகோ. **மோகன் C. லாசரஸ்** அவர்களாகும். சகோ. தினகரன் அவர்களும், அவர் மகன் **பால் தினகரன்** குடும்பமும் **ஊழிய வியாபாரத்தில்** இறங்கி கர்த்தரைவிட்டு நீண்ட தூரம் விலகி போனபின் பெரும்பாலான C.S.I. கிறிஸ்தவர்கள் தேடுவது சகோ. **மோகன் C. லாசரஸ்** அவர்களைத்தான்.

**குறிப்பு :** 2020 ஏப்ரல் மாத ஜாமக்காரனில் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் தலைமையில் **சத்தியம் TVயில் கொரோனா வைரஸ்** அழியம்படிக்காகவும், **கொரோனாவில் பாதிக்கப்பட்டவர் களுக்காகவும்** உலக **அனைத்து நாடுகளுக்காகவும்** தினசரி **சத்தியம் TV**யில் ஜெபம் நடத்துவதை குறித்து ஜாமக்காரனில் நான் விமர்சிதேன், காரணம், இரட்சிக்கப்படாதவர்களை ஜெபிக்கவைத்து அந்த ஜெபம் கேட்கப்பட்டது என்று சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் கூறி எல்லாரையும் **அல்லேுயா** ! கூற வைத்தது தவறு என்றும். அந்த **ஜெபம் கேட்கப்படாது** என்று நான் எழுதியதை ஜாமக்காரனில் வாசித்த பலர் என்மேல் மிகவும் கோபப்பட்டு, கடிதம் மூலம், email மூலம், தொலைபேசி மூலம் என்னை கண்டித்தனர்.

உங்களைப்போல (Dr. புஷ்பராஜ் போல) அனுபவம் உள்ள ஊழியர்கள் யாரும் அப்படிப்பட்ட உபவாச ஜெபம் **நடத்த முன்வராத** நிலையில் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களின் உபவாச ஜெபத்தையும் அவரின் **ஜெப முயற்சிகளையும்** ஏன் கெடுக்கிறீர்கள்? உலகம் அனைத்திலும் உள்ள சபைகளையும், இந்தியாவில் உள்ள அனைத்து விதவிதமான சபை ஊழியர்கள் விசுவாசிகள் அத்தனை பேர்களையும் **திரும்பி பார்க்கவைத்த** அந்த **அற்புத ஜெப நிகழ்ச்சிகளை** நீங்கள் ஏன் தடுக்க முயற்சி செய்கிறீர்கள்?.

இந்தியாவில் குறிப்பாக ஒவ்வொரு நாளும் இரவு சத்தியம் TV முன் சபை வித்தியாசம் இல்லாது அத்தனை மக்களையும் குடும்பமாக உட்கார வைத்ததும் TV முன் சிறியவர் முதல் பெரியவர்கள்வரை அத்தனை பேர்களையும் **முழங்கால் போட வைத்து** சரித்திர சாதனை படைத்த ஒரே ஊழியர் சகோ. **மோகன் C. லாசரஸ்** அவர்கள் ஆகும். அப்படிப்பட்டவரை நீங்கள் விமர்சிக்கலாமா ?

**கண்ணீர்விட்டு அழுத ஜெபங்கள்**

சத்தியம் TVயில் **ஒவ்வொரு ஊழியரும்** கண்ணீர்விட்டு **அழுதது** உங்கள் மனதை பாதிக்கவில்லையா? என்று கூட ஒருவர் என்னிடம் கேட்டார். அதற்கு நான் மனதை அந்த கண்ணீர் பாதித்து நான் என்ன செய்யபோகிறேன்? **கர்த்தருடைய இரக்கத்தைதானே** அந்த கண்ணீர் **பெற்று தந்திருக்க வேண்டும்.** ஆனால் அதில் ஜெபித்த பெருபாலானவர்கள் விட்ட கண்ணீர் **போலியானது** என்கிறேன். என்று அவர்களுக்கு பதில் அளித்தேன்.

**தான்** கண்ணீர்விட்டு ஜெபிக்கும் ஜெபத்தை TV **சேனல் வீடியோ** எடுத்துக்கொண்டிருக்கிறது. அதை உலகமே பார்க்கப்போகிறது என்று TV வழி **ஜெபித்த பலர்** புரிந்துகொண்டு **அழுத அழுகையிருக்கிறதே** அதைத்தான் **போலியான அழுகை** என்கிறேன். இதில் **போட்டியும்** உண்டு,

அந்த குறிப்பிட்ட ஊழியரைவிட **நான் அதிகம் கதறி அழவேண்டும்** மக்கள் அதை பார்க்க வேண்டும்! இந்த எண்ணம் அந்த TV ஜெபத்தில் ஜெபித்த பலருக்கு நிச்சயம் உண்டாயிருக்கும்.

அந்த மேடையில் அழுதவர்கள் எல்லாம் உண்மையான ஆத்தும பாரம் உள்ளவர்களானால் இவர்கள் வீட்டில் தனியாக ஜெபிக்கும்போது இந்த மாதிரி **கதறி கதறி அழுதிருப்பார்களா** ? இவர்களுடைய **மனைவிமார்களுக்கு** தெரியும். இவர்கள் பிள்ளைகள் **குடும்பத்தினர் யாவரும்** அறிவார்கள். இந்த மனுஷன் வீட்டில் இப்படி ஒரு நாளும் அழுததில்லையே! அந்த மேடையில் எப்படி இந்த அழுகை வந்தது ? என்று அவர் குடும்பத்தினர் கேள்வி எழுப்பமாட்டார்களா ?

இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில் எத்தனையோ பேர் தன் வீட்டிலும், ஆலயத்திலும் 10 பேர்களாக கூடி **விளம்பரம் இல்லாமல்** அழுதிருக்கிறார்கள் என்பது மேடையில் அழுதவர்ளுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் என்னைப்போல் உள்ள பலருக்கு தெரியும் இரகசியமாக ஜெபித்தவர்களின் உண்மையான அழுகையில் சிலருக்கு **கண்ணீர்வராது** அப்படி ஜெபித்த சிலரின் ஜெபத்துக்கும், **கண்ணீரோடு** செய்த ஜெபத்துக்கும் **நிச்சயம் பலன் உண்டு.** காரணம் கண்ணீர் வருகிறதோ இல்லையோ ஜெபித்தவர்களுக்கு உண்மையான ஆத்தும பாரம் இருந்தல் போதும்.

சகோ. மோகன் C. லாசரஸ் கொரோனா லாக்டவுன் காலத்தில் ஒவ்வொரு இரவு ஜெபத்துக்கும் சத்தியம் TVக்காக அவர் மேடைக்கு வரும்போதே அழ ஆரம்பித்து விடுவார். கண்களில் வழியும் **கண்ணீரை** வீடியோ எடுத்தவர் **குளோசப்பில் காண்பிப்பார்கள்.** இந்த **அழுகை ஜெபம்தான்** சத்தியம் TVயை கண்ட அனைத்து சபை விசுவாசிகளின் **அனுதாபத்தையும்** சம்பாதித்து கொடுத்தது.

இவருடைய **அழுகை ஜெபம்** CSI, லூத்தரன், LEF, கிறிஸ்துவின் சபையார், **பெந்தேகோஸ்தே** அதில் **TPM பெந்தேகோஸ்தே, கத்தோலிக்கர்** அத்தனை சபைகளிலும் உள்ள பெரும்பாலானவர்களை கவர்ந்துவிட்டது உண்மைதான். TVயில் வேறு எந்த சேனலிலும் **ஊரடங்கு சமயத்தில்** இப்படிப்பட்ட ஜெப நிகழ்ச்சி காட்டப்படாததால் **வீட்டில் அடைந்து கிடக்கும்** கிறிஸ்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் **வேறே மாற்று இல்லாததால்தான்** வேறு வழியின்றி அந்த ஜெபத்தை பார்க்கவும் பங்குபெறவும் வேண்டியதானது,

சூழ்நிலையையும், **மக்கள் பெலவீனத்தையும்** அறிந்து அந்த TV நிகழ்ச்சியை **மிக ஞானமாக பயன்படுத்திக்கொண்ட** ஒரே ஊழியர் சகோ. மோகன் C. லாசரஸ் என்றால் மிகையாகாது.

அவர் ஒவ்வொரு ஜெபத்துக்கும் **அழுது** ஜெபித்து அவர் விட்ட **கண்ணீர்** அந்த மேடையையே நனைத்ததை நீங்கள் பார்க்கவில்லையா ? என்றார்கள் சிலர். இப்படியெல்லாம் சிலரின் ஜீவியத்தில் சாட்சியே இல்லை. ஆகவே TV யில் காண்பிக்கும் சீரியலை பார்த்து அழுகிறார்கள். அப்படிப்பட்ட சீரியல் பார்க்கும் கண்ணோட்டத்தில் பார்ப்பவர்கள்தான் இந்த சிலர்.

வாலிப பிள்ளைகளுக்கான அவரின் செய்தி, **பெற்றோருக்கான** செய்தி, ஆகிய இவைகள் உங்களை கவரவில்லையா ? அதோடு இப்போதெல்லாம் **ஆறுதல்** செய்தியோடு **பாவத்தைக்** குறித்து **கண்டித்தும்** பிரசங்கம் செய்கிறாரே! பின் ஏன் உங்களுக்கு அவரை பிடிக்கவில்லை! இப்படி பலர் கூறுவதையும் அறிகிறேன். இப்படிப்பட்டவர்கள் என்னை தவறுதலாக விளங்கிக்கொண்டு ஒரு **நல்ல ஊழியரை** குறை சொல்கிறாரே என்று பலவாரு (பல காலமாக) பேசி என்மீது நிறைய பேர் வெறுப்பு கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் சகோ. மோகன் C.லாசரஸ் அவர்களைப்பற்றி எனக்கு எந்த பகையும் இலலை, **வெறுப்பும்** இல்லை என்பதை விவரிக்கவே இந்த **கட்டுரையை** எழுதுகிறேன். இவைகளை நீங்கள் வாசித்த பின்னும் நீங்கள் **அவரையோ** அவரைப்போல் உள்ள **மற்ற ஊழியர்களையோ** வசன வெளிச்சத்தில் விளங்கிகொண்டாலும், விளங்கி கொள்ளாவிட்டாலும் அது உங்கள் இஷ்டம். **அறிவிக்க** வேண்டியதும் **எச்சரிக்கை** செய்வதும் என் ஊழியம், **என் கடமை.** அதுவும் **என் வாசகர்களுக்காக மட்டுமே** இவைகளை அறிவிக்கிறேன்.

**இனி மேற்கொண்டு வாசியுங்கள்....**

## சகோ. மோகன் C. லாசரஸின் விழுகையின் ஆரம்பம்

சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களின் சாட்சிகளை பல முறை அவருடைய பத்திரிக்கையிலும், அவர் பிரசங்கத்திலும் TV செய்திகளிலும் உங்களில் பலர் கேட்டிருக்கலாம்.

**ஆரம்ப காலங்களில்** அவர் கூறிய அவரின் சொந்த அனுபவ சாட்சிக்கும், அதன்பிறகு பல ஆண்டுகளாக இப்போது அவர் கூறி வரும் சாட்சிகளுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அவர் இப்போது கூறும் சாட்சிகளிள் படிபடியாக புதிய புதிய அனுபவங்களை அவர் இணைத்து பேசி வருகிறார். அந்த வித்தியாச விவரங்ளை தொடர்ந்து அவர் செய்திகளை கவனிக்கும் அவர் ரசிகர்களுக்கே அது நன்றாக விளங்குகிறது என்பதை அவர்களேகூற நான் கேட்டிருக்கிறேன். **வசன அடிப்படையில் உபதேசத்தை** கூறிவரும் எங்களை போன்ற **ஊழியர்களுக்கும்,** விசுவாசிகளுக்கும் மட்டுமே அது விளங்கும்.

**ஆரம்பத்தில் அவர் மறைத்த விஷயம்**

**தானும் தன் மனைவியும் பணக்கார குடும்பத்தின்** வழியாக வந்தவர்கள் என்பதை ஆரம்பத்தில் அவர் கூற விரும்பவில்லை. அப்படி கூறாதது மக்களின் அனுதாபத்தை சம்பாதிக்கவோ! என்னவோ நான் அறியேன். தான் சிறு குக்கிராமத்தில் பிறந்து பஸ் வசதிகள் இல்லாத கிராமத்தில் வாழ்ந்தவன் என்பதை மட்டும் அடிக்கடி கூறுவார். **செழுமையும் பெரும் வளர்ச்சியும்** அவருக்கு ஊழியத்தில் கிடைத்த உடன் அவர் கூறும் சாட்சிகளில் அவரின் **ஊழிய செழுமையை** அறியலாம்.

### அவரைப்பற்றி வெளிவந்த புரளிகள்

சமீபத்தில் பிரபல வார பத்திரிகையான **குமுதம் ரிப்போர்டரில்** 1 May 2020 ரிப்போர்டர் வார பத்திரிகையிலும், சில வருடங்களுக்குமுன் வந்த சில **தினசரி பத்திரிகைகளிலும்** அவரை **பெண்களோடு** தொடர்புபடுத்தி புகைப்படத்தோடு வந்த செய்திகளை TVயில் U-tubeகளிலும் சிலர் புரளியாக பரவவிட்டார்கள். பலர் அந்த செய்திகளை காப்பி எடுத்து அவைகளை பலருக்கு அனுப்பினார்கள். குறிப்பாக CSI சபை **பிஷப்மார்களுக்கும் பிரபல ஊழியர்களுக்கும்** அவைகளை அனுப்பிவைத்தார்கள் என்பதை அறிவேன். சமீபத்தில் அந்த குற்றச்சாட்டை மக்கள் நம்புவதற்காக சமீபத்தில் வெளிவந்த **மே** மாத **குமுதம் ரிப்போர்டரில்** ஒரு பிஷப்பின் படத்தை பெரிய அளவில் வெளியிட்டு மோகன் **C லாசரஸின்** லீலைகள் என்று எழுதி சேற்றை வாரி அவர்மேல் இறைத்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட **ஆபாச புரளிகளில் நிச்சயம் உண்மை இருக்காது** என்பதாக நான் உணருகிறேன். அது அவர்கள் **குடும்ப பிரச்சனை.** இப்போது நாம் சகோதரனின் ஆவிக்குரிய விஷயத்தை கவணிப்போம்.

## என்னைப்பற்றி

கர்த்தர் எனக்கு 1969ம் வருட முதல் எனக்கு அருளிய இரண்டு முக்கிய வரங்கள் :

1) **Face Reading** ஒருவரின் **முகத்தை கண்டால்** அவர்களைப்பற்றியும் அவர்களின் குனாதிசயங்களையும் அவர்கள் உண்மையுள்ளவர்களா ! தவறு செய்தவர்களா! என்பதை ஓரளவு தோராயமாக என்னால் அறிந்துகொள்ளமுடியும். I கொ. 12:10

2) **Deserning Spirit** (Distinguish Ability) **ஆவிகளை பகுத்தறியும் வரம் அல்லது கிருபை** ஒரு ஊழியக்காரன் எந்த விதமான **ஆவியில்** பேசுகிறான். **எந்த ஆவியில்** போதிக்கிறான். பரிசுத்த ஆவியானவர் அல்லாத வேறு எந்த ஆவியில் அவன் பிரசங்கிக்கிறான் என்பதை அறியும் கிருபையை கர்த்தர் எனக்கு அளித்ததற்கு பிறகு சுமார் 3 வருடங்கள் கழித்துதான் பல ஊழியர்களுடைய **வாழ்க்கையை, பிரசங்கத்தை** அதோடு அவர்கள் செய்யும் **ஜெபத்தையும்** கேட்டு அவைகளை உறுதி

செய்து கொள்வேன். 3 வருடங்கள் அவர்களை கவணித்து உறுதி செய்துகொண்டபின் அவைகளை ஜெபத்தில் வைத்து ஜெபித்தபின்தான் பல **வரம் பெற்ற ஊழியர்களைப்** பற்றியும் அவர்களின் தவறான **தீர்க்கதரிசனங்களைப்பற்றியம்** மிக தைரியமாக ஜாமக்காரனில் விமர்சிக்க தொடங்கினேன்.

ஒரு ஊழியரைப்பற்றியோ அல்லது ஒரு நபரைப்பற்றியோ, அவர் எப்படிப்பட்டவர் என்பதை நான் அறிந்துகொள்ள அவர்களின் விவரங்களை **கர்த்தரிடம் ஜெபித்து கேட்க மாட்டேன்.** நாம் கேட்டு அவர் பதில் சொல்ல **கர்த்தர் ஒரு வேலைக்காரன் அல்ல.** அவராக எனக்கு வெளிப்படுத்தினால்தான் அவர்கள் விவரங்களை அறிந்துகொண்டு அவைகளை குறித்து ஜெபிப்பேன். ஆனால் அதை மற்றவர்களுக்கு அறிவிக்க மாட்டேன். அப்படித்தான் **அன்னிய பாஷைகளைக்** குறித்து தைரியமாக எழுத தொடங்கினேன்.

கர்த்தர் கொடுத்த கிருபைகளை நான் பெற்றபின்தான் வசன அடிப்படையில் இல்லாத விபரங்களை நான் ஜாமக்காரனில் எழுதினேன். பிரசங்கத்திலும் அறிவித்தேன். சகோ. D.G.S. தினகரன், சகோ. மோகன் C. லாசரஸ் இன்னும் பல ஊழியர்களைப்பற்றி பகிரங்கமாக விமர்சித்து எழுத தொடங்கினேன்.

அந்த அடிப்படையில் தான் 2020 மே மாத குமுதம் ரிப்போர்டர் என்ற வார பத்திரிக்கையில் மோகன் C. லாசரஸ் பாலியல் பலாத்காரம் செய்தார் என்பதைப்பற்றியும், அவர் தன் மனைவியின் சகோதரிகளிடம் தவறாக நடந்துகொண்டார் என்று அந்த **பிஷப்** எழுதியது **பொய்யான** செய்தியாகத்தான் இருக்கும் என்பதைபற்றியும் தொலைபேசியில் என்னிடம் கேட்டவர்களுக்கெல்லாம் அறிவித்தேன். அவரைப்பற்றி எழுதிவர் அவரோடுள்ள பழைய பகையை மனதில்கொண்டு சொந்த பிரச்சனைகளின் சம்பந்தமாக **தன் பகையை** வார பத்திகையில் எழுதி தீர்த்துக்கொண்டார்.

சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களின் மனைவியின் குடும்பம் **பணக்கார குடும்பம்** அவரின் மனைவியின் சகோதரர்களின் **சொத்து** தகராறு குறித்து பல வருடங்களாகவே பிரச்சனைகள் நீண்டு இருந்தது என்று கேள்விப்பட்டேன். அவைகளில் ஒன்றின் எதிரொலிதான் ஒன்றுதான் **குமுதம் ரிப்போர்டரில்** வந்த புரளிகள் ஆகும். அதை எழுதிய நபர் அவர் ஒரு **பிஷப்பே** அல்ல, இப்போதெல்லாம் ஒரே ஒரு சிறு சபையை வைத்துக்கொள்கிறவர்கள் கூட வெளிநாட்டு பணம் பெற **பிஷப் பட்டத்தை** விலைக்கு வாங்கி **லெட்டர் பேட்** அச்சடித்து கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நபர்களில் ஒருவர்தான் சகோ. மோகன் C. லாசரலஸை அவமானப்படுத்தும் நோக்கத்தில் வார பத்திரிகையில் எழுதினார்.

## உபதேச விஷயத்தில் மோகன் C. லாசரஸின் விழுகை

சகோ. மோகன் **C.** லாசரஸ் அடிக்கடி தன் சாட்சியை தன் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு முறை எழுதும்போதும் சாட்சியை மிகைப்படுத்தி, மாற்றி பேசுவதையும், எழுதுவதையும் அறியலாம்.

உபதேசத்தில் அவரின் விழுகை எங்களைப்போன்ற வசன அடிப்படையில் உபதேசிப்பவர்களுக்கும் வசன அடிப்படையில் வாழும் விசுவாசிகளுக்கும் மட்டும்தான் விளங்கிக் கொள்ளமுடியும்.

அவர் 1974ம் வருடம் இரட்சிக்கப்பட்டேன் என்கிறார். அதன்பின் BYM மிஷனரி ஊழிய ஸ்தாபகர் சகோ. **R.** ஸ்டேன்லி அவர்கள் நடத்திய **தஞ்சாவூர்** கூட்டத்தில் பரிசுத்த **ஆவியை பெற்றே**ன் என்றார். ஆனால் அப்போது அவர் **அன்னிய பாஷையில்** பேசி **நடனமாடவில்லை** என்கிறார். பரிசுத்த ஆவியை பெற்றாரே தவிற **ஞானஸ்நானம் பற்றி** அன்று தனக்கு தெரியவில்லை என்கிறார்.

2020 மே 17ம் தேதி TVயில் இவர் பேசும்போது **கர்த்தர் என்னோடு முகமுகமாக பேசினார். மிகத் தெளிவாக பேசினார்** என்கிற இந்த **இரண்டு வார்த்தையை** உபயோகித்தார். இந்த இரண்டு

வார்த்தைகளையும் அடிக்கடி அவர் உபயோகிப்பதை வாசகர்ள் அறியலாம். இயேசுவை முகமுகமாய் பார்க்கிறேன் என்பது கற்பனையாகவும், **பொய்யாகவும்** இருக்கலாம். ஆனால் வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

வேதத்தில் **புதிய ஏற்பாட்டில்** இயேசு மரித்து உயிரித்தெழுந்து பரலோகத்துக்கு பரமேரினபின் இதுவரை யாரும் **கர்த்தரை முகமுகமாக கண்டதாக** வேதத்தில் எழுதப்படவில்லை. **பவுல்** அப்போஸ்தலன்கூட தன் சாட்சியை பற்றி கூறும்போது இயேசுவை நான் **ஞானதிருஷ்டியில்** பார்த்தேன் என்றும் **தரிசனத்தில் பார்த்தேன்** என்றும் கூறுகிறார். பேதுருவும் வேறு எந்த சீஷர்களும் இயேசுவை **முகமுகமாய்** கண்டதாக வேதத்தில் பதிவு செய்யப்படவில்லை.

சாது சுந்தர்சிங் அவர்கள் தற்கொலை செய்யும் முன் ஒரு **பிரகாசத்தையும்** அதில் **சிலுவை காட்சியையும்** கண்டதாக எழுதியிருக்கிறார்.

## நான் நேரில் சந்தித்த மோகன் C. லாசரஸ்

**ஜெபத்தில்** இவர் **ஆட்களின் பெயர்களை** கூறி அழைப்பதை குறித்து அவர் வாய்மொழியை அறிய அவரிடம் நேரில் பேச நான் வருவதாக எழுதி கேட்டிருந்தேன். **நாலுமாவடி** அருகே என் கண்வென்ஷன் நடந்தபோது அவரே தன் காரை அனுப்பி என்னை தன்னிடத்துக்கு அழைத்தார்.

நாலுமாவடி சென்றபின் நேரடியாக பேச்சை தொடங்கினேன். **ஜெபத்தில் பெயர் அழைப்பதை** குறித்து கூறுங்கள் என்றேன். நாங்கள் இருவரும் சந்தித்து பேசியதை குறித்து முழு விவரத்தையும் சில ஆண்டுகளுக்கு முன்பே ஜாமக்காரனில் எழுதியிருந்தேன் என்பதை வாசகர்கள் அறிவார்கள். அப்போது அவர் கூறியதாவது. நீங்கள் ஜாமக்காரனில் எழுதியதை குறித்து உடனே என் ஜெபத்தில் ஆண்டவரிடம் கேட்டேன். **கர்த்தாவே ஜெபத்தில் நான் பெயர் அழைப்பது** உம்முடைய சித்தமானால் அடுத்த வாரம் நடக்கபோகும் கூட்டத்தில் **நான்** 10 **பெயர்களை அழைப்பேன்.** அந்த 10 **நபர்களின் பிரச்சனைகளைப்பற்றி நான் கூறுவேன்.** அந்த நபர்கள் மேடைக்கு வந்து நான் ஜெபத்தில் **அழைத்த** பெயர் சரிதான் என்றும் கூறிய பிரச்சனையும் சரி என்றும் சாட்சி கூறினால் ஜெபத்தில் பெயர் அழைக்கும் ஊழியத்தை நான் தொடர்ந்து செய்வேன். அல்லவென்றால் **ஜெபத்தில் பெயர் அழைப்பதை** இனி நிறுத்திவிடுவேன் என்று கூறினேன்.

உங்கள் ஜாமக்காரனில் நீங்கள் என்னைப்பற்றியும், நான் **ஜெபத்தில் பெயர் அழைப்பதையும்** விமரிசித்து எழுதியதால்தான் **மன வேதனையுடன்** இந்த ஜெபத்யையும் **இந்த தீர்மானத்தையும்** செய்தேன்.

அடுத்த கூட்டம் நடந்தது. ஜெப வேளையில் **நான் 10 நபர்களின்** பெயரையும் அவர்களின் பிரச்சனையும் **கூறினேன்.** அத்தனை நபர்களும் மேடைக்கு வந்து சாட்சி கூறினார்கள். அன்று இரவு நான் ஜெபிக்கும் போது கர்த்தாவே **இனி யார் இதைப்பற்றி குறை கூறினாலும்,** எழுதினாலும், **ஜெபத்தில் பெயர் அழைப்பதை** நிறுத்தமாட்டேன் என்று ஆண்டவரிடம் கூறிவிட்டேன் என்றார். அவர் கூறியதை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த நான் இனி நான் பேசலாமா என்றேன். தாராளமாக பேசலாம். உங்களைப்போல் அனுபவம் உள்ள ஊழியர்களின் ஆலோசனைகளை நானே அழைத்து கேட்பேன். குறை இருந்தால் சரிப்படுத்திக்கொள்வேன் என்றார்.

உடனே நான் முதலில் நாம் இருவரும் ஜெபிப்போம் என்றேன். நான் ஜெபத்தை துடங்கினேன். கர்த்தாவே இங்கு நாங்கள் **இருவர் மட்டும்** இல்லை. எங்கள் மத்தியில் **நீரும் இருக்கிறீர்.** தம்பி கூறியதை நீரும் கேட்டீர். ஆவியானவர் எங்களோடு பேசும் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். கர்த்தாவே ! என்று கூறி ஜெபத்தை நிறுத்தி நான் பேச ஆரம்பித்தேன்.

நீங்கள் கர்த்தரிடம் ஜெபத்தில் பெயர் அழைப்பதை குறித்து என்ன சொன்னீர்கள்? கர்த்தாவே. அடுத்த கூட்டத்தில் **நான்** 10 நபர்களின் பெயர்களை **அழைப்பேன்.** அந்த 10 பேரும் மேடைக்கு வந்தால் ஜெபத்தில் பெயர் அழைக்கும் ஊழியத்தை தொடருவேன் என்றீர்கள். இதில் பிரச்சனை என்னவென்றால் **நான்**

10 நபர்களின் பெயர்களை **அழைப்பேன்** என்றீர்கள். அப்படியானால் **கர்த்தர் அழைத்தார்** என்று எப்படி கூற முடியும்? **நீங்களாகத்தானே** 10 நபர்களின் பெயர்களை அழைத்தீர்கள்! கர்த்தருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாகிறதே என்றேன். இதற்கு அவர் கூறிய பதில் வசன ஆதாரத்தோடு அல்லாமல் சமாளிக்க முயலுகிறார் என்பது விளங்கியது. அதற்கு பிறகு நான் அவரை மன சிக்கலில் ஆக்க முயலவில்லை. மதியம் கூட்டத்தில் நான் பிரசங்கிக்க போக வேண்டும். நான் புறப்படுகிறேன் என்றேன். பிறகு திறப்பின் வாசல் கட்டும் ஏற்பாடுகளை சுற்றி பார்க்கலாம் என்றார். எனக்கு நேரமில்லை என்று புறப்பட்டு விட்டேன். இதுதான் அன்று எங்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷனை ஆகும்.

இதில் அறிய வேண்டியது என்னவென்றால் ஜெபத்தில் **பெயர்களை** கர்த்தர் **காட்டினார் என்றோ.** கர்த்தர் **பெயர்களை** என்னில் **வெளிபடுத்தினார்** என்றோ கர்த்தர் **என் காதில்** கூறினார் என்றோ கூறுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி அவர் கூறவில்லை.

சகோ. **D.G.S.** தினகரனின் சீஷர்கள் யாவரும் **ஜெபத்தில் பெயர்** அழைக்கும் போலியான **வழக்கத்தை** மக்களை கவருவதற்காக **சகோ. தினகரனிடமிருந்து** கற்ற கலை ஆகும். சகோ. தினகரன் அவர்களின் **இந்த தவறான ஊழியத்தால்** இன்று தமிழ்நாட்டில் ஈசல் பூச்சிபோல் ஏராளமான ஊழியர்கள் **ஜெபத்தில் பெயர்களை அழைத்து** மக்களை **ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.** கேரளாவிலும் **போட்டா தியான முகாமின்** கத்தோலிக்க **பாதிரியார்கள்** எல்லாரும் **ஜெபத்தில் பெயர்** அழைப்பதை கற்றுக்கொண்டார்கள். இதனால் இவர்கள் **கூட்டத்தில் ஜனகூட்டம்** அலைமோதுவதுபோல் இருக்கும்.

## ☐ சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களின் மற்றொரு பொய் அறிவிப்பு

ஒருபெரிய கூட்டத்தில் பேசுவதற்கு ஆயத்தப்பட கர்த்தரிடம் என் அறையில் நான் ஜெபித்தேன் அப்போது கர்த்தாவே இன்றைய கூட்டத்தில் பேச **எனக்கு பயமாக இருக்கிறது.** நீர் என்னோடு வருவேன் என்று **வாக்களித்தால் நான் தைரியமாக** போவேன் என்றேன். கர்த்தரும் நிச்சயமாக **நான் உன்னோடு வருவேன்** என்றார். ஜெபித்தபின் கூட்ட மேடையில் நான் அமர்ந்தேன். மறுபடியும் எனக்கு தைரியம் வரவில்லை. நீர் என்னுடன் வருவதாக வாக்களித்தீரே என்று ஜெபித்தேன். அப்போது **இயேசு என்னிடம் பேசினார்.** நான் மேடையிலேயேதான் நின்று கொண்டிருக்கிறேன் என்றார். அப்போது **மேடையின் மூலையில் இயேசு நிற்பதை கண்டேன்,** அதன்பின் அன்று தைரியமாக பிரசங்கித்தேன். **ஜெப நேரத்தில் இயேசு என் பக்கத்தில் நிற்பதையும் கண்டேன்**. அன்று கூட்டத்தில் பெரும் அற்புதங்களை கர்த்தர் செய்தார் என்றேன். இது அவரது பழைய வீடியோ டேப்பில் கண்ட விஷயமாகும்.

இதில் கவனிக்க வேண்டியது இவர் கூட்டத்துக்கு ஆயத்தமாக தன் வீட்டு **அறையில் ஜெபித்தபோது** இயேசு நீ கேட்டபடி **நான் உன் கூட கூட்டத்துக்கு வருவேன்** என்றாரே! சகோதரன் மேடையில் அமர்ந்ததும் **இயேசு இருக்கிறாரா என்ற சந்தேகம் ஏன் வந்தது?** இயேசு அறையில் அவரிடம் சொன்ன வார்த்தையில் **நம்பிக்கை இல்லையா?** அதன் பிறகு நடந்தது என்ன? **இயேசு மேடையின் மூலையில்** நின்று தன்னை **பார்த்துக்கொண்டிருப்பதை கண்டேன் என்றார்.** இவர் மேடையில் **அமர்ந்திருக்க** இயேசு கிறிஸ்துவை **இவர் மேடையின் மூலையில் நிற்க வைத்துவிட்டார்.** என்ன அநியாயம் இது ! **கற்பனைக்கும் பொய்க்கும் அளவே இல்லையா?** இவருடைய குருநாதர் சகோ. D.G.S. அவர்கள் கூட கூட்டம் நடக்கும மேடையில் இயேசு என் பக்கத்தில் நிற்கிறார் என்று கூறியதாக எனக்கு ஞாபகம் இல்லை. இயேசுவை அவர் உயிர்த்தெழுந்தது பரலோகம் சென்றபின் இயேசுவை யாரும் பார்த்ததில்லை என்று வேதத்தில் பார்க்கிறோம். அப்படியிருக்க இந்த இயேசு

மேடையின் **மூலையில் நின்றுகொண்டிருக்கிறார்** – மேடையில் **என் பக்கத்தில் வந்து நிற்கிறார்.** அவர் எயிட்ஸ் வியாதியஸ்தனை சுகமாக்க நான் கேட்டுக்கொண்டபின் இயேசு **மேடையிலிருந்து இறங்கி போகிறார்** ! என்று இவர் கூறுவது என்ன துணிகர பொய், என்ன விளையாட்டு இது? இயேசு இவர்களுக்கு விளையாட்டு பொம்மையா? இயேசு **இவர்களுக்குள் இல்லை** என்பது தெளிவாகிறது. இயேசுவை ஒரு வேலைக்காரனைப்போல இவர்கள் நடத்துகிறார்கள். இவர்கள் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் இயேசுவும் இணங்கிகொடுக்கிறார் என்று மக்கள் அறிய வேண்டும் என்று இப்படிப்பட்ட பொய்களை அள்ளி வீசுகிறார்கள்.

இப்படிப்பட்ட கதைகள் தன்னை இயேசு கிறிஸ்துவுக்கு மிக நெருங்கினவராக **பொதுமக்கள் நம்பவேண்டும்** என்பதற்காகவே இந்த விதமான கற்பனைகளை அறிவிப்பதும் இவர்கள் **தீர்க்கதரிசனம்** என்ற பெயரில் கூறுவதும் **அனைத்தும் பொய்யானவை** என்பது உறுதியாகிறது. **இப்படிப்பட்ட ஊழியர்களிடம்** வாசகர்கள் எச்சரிக்கையோடு இருக்கும்படி ஆலோசனை கொடுக்கிறேன்.

## வேதம் கூறுவதை கவனியுங்கள்

☐ இவர்கள் **தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே எடுத்துக்** தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் அவர்களோடே நீ சொல்ல வேண்டியது என்னவென்றால். **தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய ஆவியின்** ஏவுதலைப் பின்பற்றுகிற **மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ !**

இவர்கள் **நரிகளுக்கு ஒப்பாக** இருக்கிறார்கள்.

கர்த்தர் **தங்களை அனுப்பாதிருந்தும் கர்த்தர் உரைத்தாரென்று** சொல்லி அவர்கள் அபத்தத்தையும் **பொய் குறியையும்** தரிசித்து காரியத்தை (ஊழியத்தை) நிர்வாகம் பண்ணலாமென்று நம்பிக்கையாயிருங்கள்.

**இவர்களை நோக்கி** கர்த்தர் உரைப்பது என்னவென்றால் **நீங்கள்** அபத்தமானதை சொல்லி **பொய்யானதை தரிசிக்கிறபடியால்** இதோ **நான் உங்களுக்கு** (இப்படிப்பட்ட ஊழியர்களுக்கு) **விரோதமானவர்** என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

**சமாதானம்** இல்லாதிருந்தும் சமாதானமென்று (ஆறுதல் தீர்க்கதரிசனம்) சொல்லி **அவர்கள் என் ஜனத்தை மோசம்** போக்குகிறார்கள். எசே. 13:1 – 10 எரே. 14:14 உபா. 18:22

☐ **புதிய ஏற்பாட்டில்** இயேசு கிறிஸ்து **இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளை** பார்த்து கூறுவது என்னவென்றால் இவர்கள் எல்லாரும் **இயேசு** என்ற **என் பெயரை** பயன்படுத்தி **தீர்க்கதரிசனம்** உரைக்கிறார்கள். அனேக **அற்புதங்களை செய்கிறார்கள், பிசாசுகளையும்** துரத்துகிறார்கள். ஆனால் இயேசு இவர்களை பார்த்து என்ன சொல்கிறார் பாருங்கள்! **இவர்களை நான் அறியேன்** என்று கூறி இவர்களை **அக்கிரம** செய்கைகாரர்கள் என்று குறிப்பிடுகிறார். (மத். 7: 22,23 **II** தெச. 2:9, 11, 12 வெளி 16:19)

இதில் தமாஷ் என்னவென்றால் இவர்களும் எல்லாரையும் போல் **கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாக இருங்கள்** என்று பிரசங்கிக்கிறார்கள். ஒரு **திருடனை** தேடி கிராம மக்கள் ஓடுகிறார்கள் மறைந்திருந்த திருடன் அவனும் கிராம மக்களோடு சேர்ந்து **திருடனை பிடியுங்கள்** என்று கூறிக்கொண்டு ஜனங்களோடு சேர்ந்து ஓடுகிறான், ஜனங்கள் எப்படி திருடனை பிடிப்பார்கள். இப்போது தமிழ்நாட்டில் **ஜெபத்தில் பெயர்** கூறும் அத்தனை பேரும் **பொய் பேசுகிறார்கள்** நான் கூறிய திருடன் உதாரணம் போல இப்படிப்பட்ட ஊழியக்காரர் அனைவருமே கள்ள தீர்கததரிசிகளை குறித்து எச்சரித்து பிரசங்கிக்கிறார்கள் ஜாக்கிறதை !

இதில் ஏமாந்துகொண்டு இருப்பவர்கள் கிறிஸ்தவ மக்களும் புறஜாதி மக்களுமாகும்.

மேலே குறிப்பிட்ட வசனங்களில் கர்த்தர் குறிப்பிடும் முக்கிய விஷயம் **தாங்கள் தரிசியாதிருந்தும்** நான் **அவர்களை அனுப்பாதிருந்தும்** நான் கூறாததை **நான் கூறினேன்** என்று **பொய் சொல்லுகிறார்கள்.** என்று குறிப்பிடுவதை கவனியுங்கள்.

சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் இயேசுவை நான் **முகமுகமாக** தரிசித்தேன். கர்த்தர் **மிகத் தெளிவாக சொன்னார்** என்று அடிக்கடி கூறுவதின் அர்த்தம் நான் கூறுவதை **சந்தேகப்படாமல் நம்பவேண்டும்** எனபதாகும். சகோ. **வின்செண்ட் செல்வக்குமார்** கண்டதாக கூறும் தரிசனத்தை **தீர்க்கதரிசனம்** என்று கூறி ஒரு பைபிளை தியானிப்பதைப்போல் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களும் **ஏஞ்சல்** TV**யில் சாது சுந்தர் செல்வராஜ்** அவர்களும் **வின்செண்ட் செல்வக்குமார்** எழுதிய அந்த தீர்க்க தரிசன புஸ்தகத்திற்கு **விளக்கம்** கூறியதை எத்தனை லட்சம் மக்கள் ஏஞ்சல் TV மூலம் கண்டனர். மோகன் C. லாசரஸ்ஸின் விசிரிகள், பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் திருநெல்வேலி CSI கிறிஸ்தவ **வியாபாரிகள்** இப்படி பலர் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களிடம் **வேண்டாம் இந்த தீர்க்கதரிசன கூட்டணி** என்றும், **ஏஞ்சல் TV சாது செல்வராஜ்** அவர்களைப்பற்றியும், **அவர் உபதேசங்கள்** பற்றியும் **நல்ல அபிப்ராயம் இல்லை** என்றும் கூறி இந்த TVயில் வரும் உங்கள் நிகழ்ச்சியை நிறுத்துங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள்.



பலர் கடிதங்கள் எழுதி மோகன் C. லாசரஸ்க்கு அனுப்பினார்கள். அதில் சில கடிதங்களின் விவரங்களை போட்டோ காப்பி எடுத்து எனக்கும் அனுப்பினார்கள். ஆனால் அவர் யார் எச்சரித்தும் கேட்கவில்லை. அப்போதும் அவர் வெளியரங்கமாக அதே ஏஞ்ஜல் TV சேனலில் சாது செல்வராஜ் முன்பாக அந்த நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருப்பவர்களிடம் கூறியது என்ன தெரியமா ? கர்த்தரிடம் நான் ஜெபிக்கும் போது இயேசுவே இப்படி எல்லாரும் **இந்த மூவரணி ஏஞ்ஜல் TV** கூட்டணியைப்பற்றி எதிராக கூறுகிறார்களே என்று ஜெபித்தேன். அப்போது **கர்த்தர் எனக்கு மிக தெளிவாக** கூறியது என்ன தெரியுமா ?

மற்றவர்கள் என்ன கூறினாலும் சரி. **நான் தான்** உன்னை அவர்களோடு இணைத்து ஏஞ்ஜல் TV மூலமாக **தீர்க்கதரிசன** விவரங்களை உலக மக்களுக்கு சொல் என்று கூறி அனுப்பினேன். அனுப்பியது நான் தானே, ஆகவே **தைரியமாக** அவர்களோடு இணைந்து அந்த தீர்க்கதரிசன விளக்கத்தை கூறு என்று **இரண்டாம் முறையும்** மிக **தெளிவாக என்னிடம்** கூறியதால்தான் தொடர்ந்து இந்த ஏஞ்ஜல் TV நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறேன். **சாது ஐயாவை** பற்றி யார் சொன்னாலும் அந்த **தெளிவான கர்த்தரின்** கட்டளைக்கு நான் கீழ்படியாதிருப்பது எப்படி ? என்று அறிவித்து தொடர்ந்து அந்த நிகழச்சியில் கலந்துகொண்டு விளக்கங்களை கொடுத்தார்.

ஆனால் சில மாதங்கள் கடந்த உடன் நடந்தது என்ன ? ஒரு பெரும் அரசாங்க பிரச்சனை சாது செல்வராஜ் அவர்கள் கம்பெனிக்கு உண்டானது. வேறு சில அபிப்ராய வித்தியாசங்களும் அவர்களுக்குள் உண்டானது. குறிப்பாக சகோ. வின்செண்ட் செல்வகுமாருக்கும், சாதுவுக்கும் ஒத்துப்போகவில்லை.

**தீர்க்க தரிசன கூட்டணி உடைந்தது.** வின்செண்ட் செல்வகுமாரும் – மோகன் C. லாசரஸ்ஸும் **ஆளுக்கு ஒரு பக்கமாக** தப்பித்தோம் பிழைத்தோம் என்பதைபோல திடீர் என்று ஏஞ்ஜல் TVயின்

அந்த தீர்க்கதரிசன கூட்டணியிலிருந்து பிரிந்து போய்விட்டனர். அநேக மாதங்கள் வின்செண்ட் செல்வகுமார் என்ன ஆனார் என்றும் யாருக்கும் புரியவில்லை. ஏன் பிரிந்து போனார்கள் என்பது இன்றும் பரம இரசியமாக இருக்கிறது. ஆனால் ஏஞ்ஜல் TVஅலுவலகத்தில் பணி செய்யும் இரண்டு நபர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதிலிருந்துதான் பல விவரங்களை அறிந்தேன்.

**இப்போது என் கேள்வி என்னவென்றால்?**

கர்த்தர் மோகன் C. லாசரஸுடன் **முகமகமாக பேசியும், மிக தெளிவாக பேசியும்** ஏஞ்ஜல் TV சாது செல்வராஜ் அவர்களுடன் மோகன் C. லாசரஸ்சை **இணைய சொன்ன இயேசு யார் ?** கடவுள் கூறியதை **இரண்டுமுறை உறுதிபடுத்தும்** வகையில் சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களோடு ஜெபத்தில் **மிக தெளிவாக** பேசியது யார்? அப்படியானால் அந்த இயேசு **பேசியது பொய்யா** ? அல்லது அது மோகன் C. லாசரஸின் **கற்பனையா** ?

**வேதம் என்ன சொல்லுகிறது என்பதை கவனிப்போம்.**

யோபு 33:14 **தேவன் ஒரு விசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசை பார்த்து திருத்துகிறவர். அல்லவே!**

**பொய் பேச** தெய்வம் ஒரு **மனுஷனுமல்ல** என்றும் வேதம் கூறுகிறது.

இப்ோது சகோ. மோகன C. லாசரஸ் அவர்கள் கர்த்தரை **முகமுகமாய் என்னோடு பேசினார்** என்று அவர் **கூறியது பொய்** என்று ஏன் கூறக்கூடாது ?

**மிகத் தெளிவாக கர்த்தர் பேசினார்** என்று ஒவ்வொரு முறையும் இவர் கூறியதை **பொய்** என்று ஏன் கூறக்கூடாது ?

கர்த்தர் என்னோடு **மிகத் தெளிவாக** பேசிதான் ஏஞ்ஜல் TV சாது செல்வராஜ் உடன் **இணைந்தேன்** என்பது **நூற்றுக்கு நூறு பொய்தானே!** இபபோதும் **மிகத்தெளிவாக** கர்த்தர் **முகமுகமாய்** என்னோடு பேசியதால்தான் ஏஞ்ஜல்TVயின் தீர்க்கதரிசன கூட்டணியிலிருந்து பிரிந்தேன் என்பதும் **நூற்றுக்கு நூறு பொய்தானே!**

இப்போது வாசகர்கள் நீங்களே சொல்லுங்கள் இப்படி பல விதங்களில் **பொய் பேசும்** நபரின் **ஜெபத்தை** கர்த்தர் கேட்பாரா? மற்றவர்கள் கூறும் பொய்களை மன்னியும் என்று கூற இவருக்கு **தகுதி இல்லையே !**

## சகோ. தினகரனின் தங்க சாவி

**இயேசு அழைக்கிறார்** ஸ்தாபகர் மறைந்த சகோ. D.G.S. தினகரன் அவர்கள் **வியாபாரிகளை** தன் பக்கம் இழுக்க ஒரு **பொய் திட்டம்** ஒன்று உருவாக்கியதை உங்களில் பலர் அறிவீர்கள். நான் அதை ஜாமக்காரனில் எழுதி விமரிசித்தேன். சகோ. தினகரன் **தங்கசாவி திட்டம்** என்பது **பிசாசின் திட்டம்** அகும். அது பணம் சம்பாதிக்கும் **கவர்ச்சி வியாபாரம்** என்றும் ஜாமக்காரனில் அன்றே எழுதினேன். சகோ. தினகரன் கூறியது என்னவென்றால் கர்த்தர் என் வீட்டில் **நேருக்கு நேர்** வந்து ஒரு **புது திட்டத்தை** கூறினார் என்று D.G.S. அவர்கள் தன்னுடைய டிரஸ்டில் உள்ள **பணக்கார டிரஸ்டிகளுடன்** பேசியதை இயேசு அழைக்கிறார் பத்திரிகையிலும் TVயில் பார்த்திருப்பீர்கள். கர்த்தர் என்ன கூறினாராம் ?

பல **வியாபாரிகள்** வியாபாரத்தில் **முன்னேற்றம்** இல்லாமல் **மன உளைச்சலில்** இருக்கிறார்கள். நீ **தங்கத்தினால் ஒரு சாவியை** உண்டாக்கி வை. அந்த **சாவிகளை என் காயம் பட்ட கைகளை வைத்து** ஆசீர்வதிப்பேன். ஆசீர்வதிக்கப்பட்ட அந்த **தங்க சாவியை** யார் வாங்கி தன் **அலுவலகத்தில்** அல்லது **வியாபாரம்** செய்யும் **கடையில்,** தன் **தொழில்சாலையில்,** தன் **கம்பெனியில்** அவர்கள்

அமரும் ஆசனத்துக்கு **பின்னே உள்ள சுவரில்** தொங்கவிடகிறார்களே, **அருள்நாதர்** அந்த தங்க சாவியை வாங்கியவர்கள் நடத்தும் எந்த **ஸ்தாபனத்தையும் ஆசீர்வதித்து பணம் பெருகச் செய்வார். வியாபாரம செழிக்கும்** என்று அறிவித்து அதை விளக்க **ஒரு சிறப்பு கூட்டம் நடத்தி** பெரும் பணக்கார பிரமுகர்களை கூட்டி சேர்த்தார். அந்த **தங்க சாவியை** ஒவ்வொருக்காய் ஜெபித்து கொடுத்தார். அப்படி ஜெபித்து கொடுத்த அந்த **தங்க சாவியை** முதலில் வாங்கியது யார் தெரியுமா? சகோ. தினகரனின் சீஷனாகிய சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களாகும் என்று அங்கு கூடியிருந்த **மலையாள** பணக்கார **கிறிஸ்தவ சகோதரர்கள்** கூறிக் கொண்டதாக நான் அறிந்தேன்.




அது **தங்க சாவி** ஆனதினால் அதை வாங்கியவர்கள் யாரும் இரவு அலுவலகத்தை மூடும்போது அதை தங்கள் **ஆசனத்துக்கு பின்னே சுவரில் தொங்கவிட்டு** போகமாட்டார்கள். கடையை மூடும்போது அதை **பத்திரமாய் இரும்பு பெட்டியில்** வைத்து பூட்டிவிட்டுதான் செல்வார்கள் அல்லது தங்கள் கூடவே எடுத்துக்கொண்டு போவார்கள் **தங்க சாவி ஆயிற்றே** அதை எவனாவது திருடி செல்ல முடியுமே ! **ஒரு சாவி** விலை **ஒரு லட்சம்** என்று கூறினார். இந்த தங்க சாவி ஏழைகளுக்கல்ல ! ஒரு லட்சும் கொடுப்பவர் எந்த மதத்தில் இருந்தாலும் அவர்களுக்குதான் அந்த ஆசீர்வாதம். என்ன பயங்கர சூதாட்ட தந்திரம் ! இவருடைய அருள்நாதருக்கு மட்டுமே உண்டாகும் ஏமாற்று வியாபார தந்திரமாகும்.

இது **தெலுங்கு சினிமா** மாயாஜால கதையைபோல இல்லை? இது என்ன ஒரு **ஏமாற்றுத்தனம்!** இது கர்த்தருக்கு செய்யும் **பெரிய துரோகம் அல்லவா. எகிப்திலிருந்து** தன் மக்களை மோசே விடுவித்து கானானுக்கு அழைத்து வரும் போது எகிப்திலுருந்து புறப்பட்ட அந்த மக்களிடம் **அனைத்து தங்க நகைகளையும்** அனிய சொன்னதே **கர்த்தர் தானே!** கடல் கடந்து பர்வோனிடமிருந்து அவர்களை தப்பிக்க வைத்து கரைக்கு வந்து சேர்த்ததுபோல மோசேயோடு கூட இருந்த ஊழியக்காரனே அந்த **நகைகளை உருக்கி** ஒரு **காளை சிலையை** உண்டாக்கி இதுதான் நம்மை **கானனுக்கு வழி நடத்தும் தெய்வம்** என்றானே ! மோசே தாமதித்து வந்ததால் அந்த ஏற்பட்டை செய்த அந்த ஊழிக்காரனே நம்தெய்வத்துக்கு விரோதமாய் மக்களை **விக்கிரக ஆராதனை** செய்ய **தூண்டிவிட்டானே** ! அதே போல சகோ **தினகரனும் தங்க சாவியை** விக்கிரமாக்கி **வியாபாரிகளுக்கு** விற்பனை செய்தாரே! **கர்த்தரின் கோபம்** பற்றி எரிந்தது. மோசே மலையிலிருந்து இறங்கி அந்த **தங்க காளையை** பொடி செய்து இஸ்ரவேல் மக்கள் அனைவரின் **வாயிலும் வலுக்கட்டாமாய்** ஊற்றி **குடிக்க வைத்தார். கர்த்தரின் கோபத்தின் உச்சம் இது.**

**வேதத்தை மனப்பாடமாக** படித்த சகோ. தினகரன் **சாவி என்ற விக்கிரகத்தை** உண்டாக்கி **அருள்நாதர்** கட்டளையிட்டார் என்று **பொய்** சொல்லி **ஒரு சாவி ஒரு லட்ச ருபாய்க்கு** விற்றார் என்று கேள்விப்பட்டோமே! அவருடைய சீஷன் மோகன் C. லாசரஸ் அவர்களும் **ஒரு லட்சம்** கொடுத்து அந்த **சாவியை** முதல் ஆளாக வாங்கியது எத்தனை பெரிய வெட்கக்கேடு. இவர்கள் எப்படி இயேசுவை பிரசங்கிறார்கள் ? இவர்களின் ஜெபங்கள் கேட்கப்படும் என்று நினைக்கிறீர்களா?

**இவர்களுடைய விசுவாசத்தின் நிலைபாடு என்ன ?**

இந்த நிகழச்சி உண்மையானால் **சகோ. தினகரனை** இயக்கிய **அதே அருள்நாதர்** என்ற பெயரில் உள்ள **பிசாசு** சகோ. **மோகன்** C. **லாசரஸ்குள்ளும்** பிரவேசித்து அந்த **அருள்நாதரின்** கிரியையான **ஜெபத்தில் பெயர் அழைப்பதை** துடங்கி அந்த ஊழியம் உண்மை என்று நிரூபிக்க **பல பொய் சாட்சிகளை ஊக்குவித்து** கிறிஸ்தவர்களை மட்டுமல்ல **புற ஜாதி மக்களையும்** தவறான திசையில் அழைத்து போகிறார் என்பதை இந்த மக்கள் எப்போது விளங்கிக் கொள்வார்கள் என்று

விளங்கவில்லை. **ஜாமக்காரன்** வாசகர்களாவது விளங்கிகொள்ள வேண்டும் என்றும் அவர் ஊழியத்தை **தாங்குகிறவர்களும்** விளங்கி கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த கட்டுரையை எழுதினேன்.

இப்படிப்பட்ட **பிசாசின் கிரியைகள்** சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களிடமும் காணப்படுவதால்தான் **சத்தியம்** TV**யில்** கோரோனா ஊரடங்கு மாதங்களில் நடந்த உபவாசமும் உலக மனைத்திற்காகவும் **ஜெபிக்க** அறிவித்து **உபவாச ஜெபம் நடத்தியது** போலியானது. அவருடைய உபதேசம் ஜெபத்தில் **பெயர் சொல்லி** அழைப்பது – அவர் பேசும் **அன்னிய பாஷை** யாவும் **பொய்யாய்** இருப்பதால்தான் **ஜாமக்காரன் வாசகர்களை** அந்த ஜெபத்தில் கலந்துகொள்ள நான் ஊக்குவிக்கவில்லை.

☐ **அவிசுவாசிகள்** முன் **அன்னிய பாஷையில்** பேசாதீர்கள் என்றும் அந்த **அவிசுவாசிகளும் புற ஜாதிகளும்** உங்களை **பைத்தியக்காரர்** என்று நினைப்பார்களே ! என்று பவுல் தெளிவாக கூறியும் சகோ. மோகன் C. லாசரஸ் **TVயில் செய்த ஜெபத்தில்** TV பார்க்கும் அனைவரும் **அன்னிய பாஷையில்** ஜெபிப்போம் என்ற போது விவரம் அறியாத மககள் **அன்னிய பாஷையில்** பேச முயற்ச்சி செய்தார்களே ! அது எவ்வளவு பெரிய விசுவாச துரோகம்

அந்த குறிப்பிட்ட மாதங்களில் பிசாசு **மோகன் C. லாசரஸ்** மூலமாக எத்தனை **வஞ்ஜனையாக** செயல்பட்டானே! **சிறுவர்கள்** ஆராதனை VBS **கூட்டங்கள்** யாவிலும் அந்த பொய் கலந்ததே ! அந்த களங்கம் இல்லாத சிறு **பிள்ளைகளையும் அன்னிய பாஷை** பேசி **குதிக்கவும்** துள்ளவும் செய்து விட்டாரே ! அதைப் பார்த்து பலர் **மோசம் போனோமே** என்று எழுதினார்கள்

அவர் TVயில் **சிறுவர் நிகழ்ச்சி** நடத்தியது வீட்டில் இருக்கும் பிள்ளைகளுக்கு மிகவும் பிரயோஜனமாக அமைந்தது உண்மைதான். நானும் அதை கவனித்தேன். ஆனால் **சிறு பிள்ளைகள்** மனதில் **அன்னிய பாஷை** என்ற **விஷத்தை கலக்கிவிட்டாரே** என்கிற மன வேதனை எனக்கு உண்டு.

வாசகர்கள் இவைகளை விளங்கி கொள்ள வேண்டும் என்பதற்காகவே வெளிப்படையாக சகோ. மோகன் C. லாசேரஸ் அவர்களின் ஆவிக்குரிய வீழ்ச்சியின் விவரத்தை எழுதினேன்.

## சகோ. மோகன் லாசரஸ் ஊழியத்தில் பணம் வீழ்ச்சியை உண்டாக்கியது

சகோ. D.G.S. தினகரனின் **ஊழியத்தைபோல்** தானும் செய்ய விரும்பியது தான் **அவர் ஆத்துமா விழுந்து போக முதல் காரணம்.** இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தாலந்து இருக்கும். அந்த தாலந்தின் அடிப்படையில்தான் கர்த்தர் நம்மிடம் கணக்கு கேட்பார். மற்றவர் தாலந்தை எனக்கும் வேண்டும் என்று வலுகட்டாயமாக கர்த்தரிடம் கேட்க முடியாது. 11 பேதுரு 1:10 **ஆகையால் சகோதரரே உங்கள் அழைப்பை தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிறதையாக இருங்கள். இப்படி செய்தால் நீங்கள் ஒருநாளும் இடறி விழுவதில்லை.**

**அழைப்பு வேறே ! தெரிந்துகொள்ளுதல் வேறே** ! ஒரு ஊழியக்காரன் யோனாவை போல் எந்த இடத்தில் செய்தாலும் எல்லாம் ஊழியம்தானே! **நினிவே** போனால் என்ன? **தர்ஷிஸ்** போனால் என்ன? என்று நினைத்து ஊழியம் செய்யப்போனால் **புயல் வரும், அலை எழும்பும்.** உன்னால் மற்றவர்களுக்கும் **பெருத்த நஷ்டம்** உண்டானதே ! அப்படியே உனக்கு இரட்சிப்பை இலவசமாய் கொடுத்த கர்த்தரின் மனதை நோக செய்கிறாய் உன் தவறான ஊழிய தெரிந்தெடுப்பினால் நீ கர்த்தரை விட்டு விலகிபோகிறாய் என்பதை அறிந்துக்கொள்.

பல ஊழியர்கள் நினைப்பது என்னவென்றால் **பாஸ்டர் ஊழியத்தில்** நல்ல வருவாய் கிடைக்கிறது. அவர்கள் **மக்கள் மதிக்கிறார்கள்** என்று ஏராளமானவர்கள் பாஸ்டர்களாக ஊழியம் செய்ய துடக்கிறார்கள். 6ம் வகுப்பு படித்திருந்தாலும் B.A., படித்திருந்தாலும் **பாஸ்டர் ஆகவேண்டும்** என்ற எண்ணத்திலேயே பல சபைகளில் **உதவி பாஸ்டர்களாக** செயல்படுகிறார்கள். **துதி ஆராதனை நடத்தவும்,** சபையில் ஜெபிக்கவும், சில கதைகளை சொல்லி சின்ன பிரசங்கம் செய்ய தொடங்கினால் போதும். **உடனே சபையை உடைத்து**

**தனிசபை துடங்கி விடுகின்றனர். சபை மக்களுக்காக** பாரப்பட்டு **ஜெபிக்கும்** பாரம் இல்லாதவர்கள் எல்லாம் **பாஸ்டர்கள்** ஆகிவிடுகின்றனர். அவர்கள் யாவரின குறியும் **தசம பாகம்** ஆகும்.

சகோ. மோகன் C. லாசரஸ் மனம் திரும்பிய ஆரம்பத்தில் அவர் கிராமத்தில் **நன்றாக ஊழியம்** செய்தார், சென்னையில் **வீதிகளில் சுவிசேஷம் அறிவித்து ஊழியம் செய்தார்.** ஆனால் சகோ.D.G.S. தினகரன் ஊழியம் எங்கெங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் சென்று **அவரையே கவனித்ததால்.** அவர் நடத்திய 15 நாள் பயற்சியில் பங்குகொண்டபின் **தன் ஊழியத்தை** சகோ. D.G.S. போல செய்யவேண்டும் என்பதை **மனதில் உறுதிபண்ணி** செயல்படவும் ஆரம்பித்தார்.

**சகோ. தினகரன் &** C. **மோகன் லாசரசும் பணத்தில் விழ காரணம்**

சகோ. தினகரும் சகோ. மோகன் C. லாசரசும் பணத்தை தேடி அலையவில்லை. ஆறுதலை தேடி வந்த மக்களுக்கு ஏற்ற செய்திகளை இவர்கள் தயார் செய்து பிரசங்கிக்க **அந்த பிரசங்கத்திலும் ஜெபத்திலும்** மக்கள் மிகவும் கவரப்பட்டு **மக்களாகவே** இவர்களுக்ன் காணிக்கைகளை கொட்டினார்கள்.

## Bro. D.G.S. தினகரன்

சகோ. D.G.S. தினகரன் அவர்கள் வங்கி மேனேஜராக இருந்ததால் சம்பளம் மிக அதிகம் . தன் தாயின் **தங்க நகைகள்** ஏராளம். தன் மனைவிக்கு **வரதட்சனையாக** கிடைத்த நகைகளும் ஏராளம். சொந்த வீடுகள் **அருகம்பாக்கத்திலும்,** சென்னையில் மற்றொரு பக்கத்திலும் வாங்கியிருந்தார். அகவே அவருக்கு பண பிரச்சனை இல்லை. ஆனால் ஊழியத்தில் உயர உயர கூட்டங்களில் அவருக்கு ஆள் கூட்டம் அதிகமாக கூட கூட **காணிக்கைகள் அளவில்லாமல்** அவரிடம் வந்து விழுந்தது.

இப்போது **வருமான வரி** பிரச்சனை வந்தது. தேவையில்லாமல் **கோடிக்கணக்கில்** வந்து சேர்ந்த பணத்தை **வருமான வரிக்கு** ஏன் அள்ளி கொடுப்பானேன். **வந்த கோடிகளுக்கு** செலவு காண்பித்தால் போதும் என்று அவர் ஆடிட்டர்கள் ஆலோசனை கூற அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் போதுதான் **அமெரிக்க** பயணமும் **ஓரல் ராபர்ட் யுனிவர்சிட்டியையும்** நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு தோன்றிய திட்டம்தான் **காருண்யா கல்லூரி** துடங்கும் திட்டம். அதற்கென்று **மகனை ஊழியத்துக்கு** படிக்கவைக்காமல் **வியாபார துரையின்** படிப்பை M.B.A. **படிக்க வைத்தார்.** அவர் கல்லூரி தொடங்கின ஆரம்பத்தில் பேசிய முதல் **பொய் அறிவிப்பு**தான் கர்த்தர் **ஏழைகளுக்கென்று கல்லூரி துடங்க சொன்னார்** என்பதாகும் அப்படியே **அடுக்கடுக்காய் ஏராளமான பொய் செய்திகளை கர்த்தர் சொன்னார்** என்ற பெயரில் மக்களிடம் **அள்ளிவிட்டார்.** அதன்பின் கர்த்தர் பல **தண்டனைகளை** வரிசையாக D.G.S.க்கு கொடுத்துப் பார்த்தார். முடிவில் **மகளின் மரணம்** வரை தண்டனை நீண்டுபோனது. **ஊழிய புகழ்ச்சியில்** மிக உயர போனவர் **தன் மரணம் வரை** கீழே இறங்காமலேயே **மரித்து போனார்.**

D.G.S.ம் ஊழியத்தின் ஆரம்பத்தில் **பணம்** அவர் கேட்கவில்லை – ஆனால் **ஆறுதல்** பிரசங்கத்திலும் அவர் **பாடல் கவர்ச்சியிலும்** மக்கள் மெய்மறந்து **பணத்தை அள்ளி அள்ளி கொடுத்து** அவரை கர்த்தரைவிட்டு வலக வைத்தார்கள். அவர் விழுகைக்கு அவரை நேசித்த **மக்களே தான் காரணம்.**

## சகோ. மோகன் C. லாசரஸ்

இப்போது அவர் சீஷனாகிய சகோ. **மோகன் C. லாசரஸ்** வீழ்ச்சிக்கும் **பணம் தான் காரணம்** சமீபத்தில் **ஏப்ரல்** மாதம் **சத்தியம் TVயில்** பேசும்போது **திறப்பின் வாசலுக்கு** வரும் மக்களிடமோ வேறு யாரிடமும் **ஒரு தம்படி பணம் நான் கேட்டதில்லை.** கூட்டத்தில் **இன்று வரை காணிக்கை எடுத்ததில்லை காணிக்கை பெட்டி** எதுவும் வைத்ததில்லை என்றார். இது **கர்த்தருக்கு முன்பும்** மக்களுக்கு முன்பும் சொன்ன **துணிகர பொய் ஆகும்.**

## காணிக்கை டிக்கட் கவுண்டர்

எப்படியெனில் காணிக்கை வாங்கவில்லை என்று கூறும் இவர் **திறப்பின் வாசலின்** முன்பாக **இரண்டு பக்கமும் சினிமா டிக்கட் கவுண்டர்** போல ஜனங்கள் வரிசையாக நின்று பணம் செலுத்த **கவுண்டர்கள் கட்டியது ஏன் ?** காணிக்கை கேட்காத அவர் **எதை எதிர்பார்த்து** அந்த பணம் வாங்கும் **கவுண்டர்களை கட்ட வேண்டும்.** கூட்டத்தில் **ஊழியத்தின் தேவைகளை** மட்டும் கூறுவேன். கட்டிட பணிகள் **பூர்த்தியாகாததை** மட்டும் கூறுவேன் என்றால் **என்ன அர்த்தம்? பணம் வேண்டாம்** காணிக்கை வேண்டாம் **என்று அர்த்தமா**? விருப்பப்படுபவர்கள் வெளியில் உள்ள கவுண்டரில் **காணிக்கை கொடுத்துவிட்டு ரசீது வாங்கிக்கொண்டு** போங்கள் என்று மறைமுகமாக கூறுகிறார் என்று அர்த்தம்.

**TV பார்ப்பவர்கள்** அத்தனைபேரும் **இயேசு விடுவிக்கிறார்,** திறப்பின் வாசல் ( சகோ. மோகன் C. லாசரஸ் ) **ரசிகர்கள் அல்ல.** என்னைப்போல் இன்னும் ஆயிரமாயிரம் **வசன அடிப்படையில் விசுவாச வாழ்க்கை நடத்துபவர்களும் அந்த TVயை அவ்வப்போது கவனிக்கிறார்கள்.** இவர்கள் யாரும் மாங்கா மடையர்கள் அல்ல. இவர் எவ்வளவு ஞானமாய் பட்டும் படாமல் காணிக்கைகளை **கோடி கோடியாய்** சேர்க்கிறார் என்தை உலகமே கவனிக்கிறது. அவர் கூறும் பல தீர்க்கதரிசனங்களும் அறிவிப்புகளும் யாவும் **பொய் என்று தெளிவாக** புரிந்துகொள்ளும் ஊழியர்கள் விசுவாசிகள் பலரும் அந்த TVயை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மோகன் C. லாசரஸ் கவனிக்க தவறிவிட்டார்.

- ☐ **பொய் சாட்சிகள் :- திறப்பின் வாசல்** கட்ட, சூப்பர் ஸ்ஷாலிட்டி கட்ட **5000 ரூபாய் கொடுத்தேன்** – கர்த்தர் எனக்கு **10 லட்சம் கொடுத்தார்.** 2000 **ரூபாய் கொடுத்தேன்** – கர்த்தர் **என் கடன்களை** எல்லாம் அடைத்து சொந்த வியாபாரம் செய்ய **வீடும்.** கட்டிடமும் சொந்தமாக வாங்கிக் கொடுத்தார்.
- ☐ இப்படி எழுதுவது சாட்சி அல்ல **வியாபாரம். வியாபார விளம்பரம்** லாட்டரி டிக்கட் போல 50 **ரூபாய் லாட்டரி டிக்கட் வாங்கினால் 10 கோடி கிடைக்கும் என்று** பத்திரிகையில் விளம்பரம் செய்கிறார்களே அதைப்போல இதுவும் ஒரு சூதாட்டம் எனடபதை மறக்க வேண்டாம்.

## ஜெப மலை

☐ தமிழ்நாட்டில் **தென்காசி** மாவட்டத்தில் **கடயம்** என்ற ஊர் அருகே பல கோடி ரூபாயில் **பிரம்மான்டமான** நிலமும். ஒரு **சிறு மலை குன்றும்** சகே. மோகன் C. லாசரஸ் அவர்கள் விலைக்கு வாங்கி அதில் **நாட்டுக்காக** ஜெபிக்க **ஒரு அறை, உலகத்துக்காக** ஜெபிப்பதற்கு ஒரு அறை. **தங்கள் சொந்த பிரச்சனைக்காக** குடும்பமாய் ஜெபிக்க **ஒரு அறை, தனியாக** ஜெபிக்க ஒரு **அறை**. இப்படி அந்த **குன்று முழுவதும்** ஆங்காங்கே அறைகளை கட்டி வைத்துள்ளார். வெளி ஊரிலிருந்து வருகிறவர்கள் தங்குவதற்கு விதவிதமான விலையில் தங்கும் **விடுதிகள்** கட்டி வைத்திருக்கிறார். அப்படியே **குற்றாலத்தில் குளித்து வர** வாகன சவுகரியம் செய்து வைத்துள்ளார். சுற்றுலா பயணிகள் **ஒரு சுற்றுலா** விடுதியில் தங்க என்னென்ன சவுகரியங்கள்,வசதிகள் தேவைப்படுமோ **அத்தனை வசதிகளும்** அந்த **ஜெப மலையில்** கட்டியிருக்கிறார்கள். அதைபற்றிய விவரம் அறிவிக்க **டூரிஸ்டு கைடு விவரங்களும்** தன் **பத்திரிகையிலும்** தன் சத்தியம் TV யிலும் விளம்பரங்ள் செய்து கொண்டிருப்பதை உங்களில் பலர் கண்டிருக்கலாம். ஏறக்குறைய **ஜெப மலை** என்பது டூரிஸ்ட் கவர்ச்சி இடமாக மாறிவிட்டது.

**தென்கொரியா – பால் யாங்கிசோ வழியை மோகன் C. லாசரஸ் பின்பற்றினார்.**

**திருப்பத்தூர்** உபவாச ஜெபம் நடத்தும் **நால்வர் அணியில்** உள்ள சிலர் **தென்கொரியாவில்** உள்ள பாஸ்டர் யாங்கிச்சோவின் உலகின் **மிகப்பெரிய சபையும்.** சுமார் **10 லட்சம் பேர் ஆராதிக்கும்**

ஆலயத்தையும் **ஜெப மலை** என்ற பெயரில் அவர் அமைத்திருக்கும் ஏற்பாடுகளையும் கண்டுவர புறப்பட்டார்கள் அந்த குழுவில் சகோ. **மோகன் C. லாசரஸ்ம்** ஒருவர் ஆகும்.

சகோ. D.G.S. **தினகரன்** அமெரிக்காவில் **ஓரல் ராபர்ட் யுனிவர்சிட்டியை** சுற்றி பார்த்து இந்தியா திரும்பியவுடன் பிற்காலத்தில் தன் **மகனுக்கு** வருமானம் உண்டாக்கும் தொழில் ஏற்பாடு செய்ய எப்படி **காருண்யா கல்லூரியை** கோயம்முத்தூரில் தொடங்கினாரோ ! அதே போல **பால் யாங்கசோ ஜெப மலை**யை சகோ, மோகன் C. லாசரஸ் கண்டவுடன் **சில ஆண்டுகள்** கழித்து தொடங்கினார். இந்த ஜெ**ப மலை ஆகும்.** இந்த ஜெப மலையை வாங்க மக்கள் கணக்குபார்க்காமல் அனுப்பிய **கோடி கணக்கான ரூபாய்களாகும்.**

**ஜெபத்தில் பெயர் சொல்லும்** ஊழியத்தில் சகோ. தினகரனை பின் பற்றியதை போல **பணம் சம்பாதிக்கும்** ஊழிய வியாபாரத்தில் **பால் யாங்கிச் சோ** வை மோகன் C. லாசரஸ் பின்பற்றினார். ஜெப மலையைபற்றி மட்டுமல்ல இவர் கட்டியிருக்கும் **சூப்பர் ஸ்பெஷாலிட்டி** ஆஸ்பத்திரியையும் மனதில் வைத்துதான் இவர் ஆரம்பித்து ஊழிய வியாபாரம் என்றேன்.

## பால் யாங்கிச்சோ

**பரவச ஊழியத்தை** செய்யும் **பால் யாங்கிச்சோ** அவர்கள் உலக புகழ் உச்சியில் சென்றார். அவர் உபதேசமும் மாறியது. திடீரென்று (Fourth Dimension) **நான்காவது பரிமாணம்** என்ற உபதேசத்தை புத்தக வடிவமாக்கி வெளியிட்டு வசனத்தைவிட்டு விலகினார். தானும் விலகி மற்றவர்களையும் உபதேசத்தில் கெடுத்துப்போட்டார்.

வேதத்தில் 8000திற்கும் மேலான **வாக்குறுதிகள்** இருப்பதாக கூறும் **பால் யாங்கிசோ** அவற்றை நாம் **தேவ சித்தத்தின்படி** கேட்காமல் **கர்த்தரிடம் கட்டளையிட்டு** பெற்றுக்கொள்ளவேண்டும் என்று போதித்தார். கொரியாவில் உள்ள இவருடைய சொந்த சபை மக்களும் இவரின் **புது உபதேசத்தை கேட்டு** செய்வதறியாது தடுமாறினார்கள். அப்படியே இவர் உலக நாடுகளில் எங்கு பிரசங்கித்தாலும் அந்த பிரசங்கத்தை கேட்டவர்களும் குழம்பி போனார்கள்.



☐ வேதம் கூறுவதை கவனியுங்கள் **நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்கு செவி கொடுக்கிறார்.** 1 யோ. 5:14 வேதம் இப்படி கூறும்போது இவர் கூறும் ஆலோசனை விபரீதமாக இருக்கிறது. பிசாசு பால் **யோங்கிசோவுக்குள் புகுந்து விட்டான்** என்பது தெளிவாக தெரிகிறது. மற்ற பல விவரங்களை சில வருடங்களுக்குமுன்பே ஜாமக்காரனில் எழுதிவிட்டேன்.

இப்போது கவனியுங்கள் **உபதேசங்கள் மாற** ஆரம்பித்ததும் இவர் **புத்தியும்** மாறி **பண ஆசையில்** விழுந்து போனது. உலகத்திலேயே மிக அதிகமான **காணிக்கை** இவர் சபைக்குதான் கிடைக்கிறது.

**பால் யாங்கிசோவும்** அவர் **மகனும்** சேர்ந்துதான் இந்த **பண ஊழலில்** இறங்கினார்கள். **பால் யாங்கிசோ** எப்போதும் உலகம் சுற்றும் வாலிபனாக, ஊழிய விஷயமாக வெளி நாடுகளுக்கு செல்வது வழக்கம். அவர் சொந்த நாட்டில் தங்குவது குறைவு. ஆகவே **சபை நிர்வாகம், காணிக்கை கையாளும் உரிமையை** தன் **மகனிடம் ஒப்படைத்தார்.** ஆனால் அந்த மகனோ **சபை காணிக்கை** பணத்தை தவறாக உபயோகிக்கிறார் என்பதை **சபை நிர்வாகிகள்** சிலரும் வங்கியில் **வேலை செய்யும்** சபை விசுவாசிகளும் **கண்டு பிடித்தனர்.**

இவர் சபையின் காணிக்கையை **ஷேர் மார்கெட்டில்** போட்டு வரும் லாபத்தை தன் வங்கி காணக்கில் சேர்த்தார் என்பதை சபை மக்கள் அறிந்தவுடன் **வருமான வரி** துறைக்கும், போலீஸ்க்கும்

**சபை மக்களே புகார்** அளித்தனர். உடனே விசாரனை நடந்தது. அதில் **பால் யாங்கிசோவின்** அனுமதியுடன்தான் **சபை பணத்தை ஷேர் மார்கெட்டிலும்** மற்ற **வியாபார துறையிலும்** மகன் **முதலீடு செய்ததாக** கண்டு பிடிக்கப்பட்டது. உடனே பால் யாங்கிசோ **சிறையில் அடைக்கப்பட்டார்.** பேரும் புகழும் வீழ்ந்தது. சபை நிர்வாகிகள் உதவி பாஸ்டர்மார்களை வைத்து சபையை நடத்தினார்கள்.

**பண ஆசை** எல்லா தீமைக்கும் வேர் ஆனது. 1 தீமோ. 6:10 **பால் பாங்கிசோ** வழியை பின்பற்றின **மோகன் C. லாசரஸ்க்கும்** மக்கள் அள்ளித்தந்த **காணிக்கை** பணம் அளவுக்கு மீறி குவிந்ததால் **வருமானவரி** துறையினர் அத்தனை கோடிபணத்துக்கும் **வரி விதிக்காமல் இருக்க நாலுமாவடியிலேயே சூப்பர் ஸ்பெஷாலிட்டி** என்ற உயர்ந்த சிகிச்சை கிடைக்கும் **சகல வசதிகள்** உள்ள விலை உயர்ந்த ஆஸ்பத்திரி **உபகரணங்களோடு** வியாதியஸ்தர்களுக்கு உயர்ந்த வசதியுள்ள **படுக்கை அறைகள், ஆப்பரேஷன் தியேட்டர்** ஆகிய விலை உயர்ந்த ஏற்பாடுகள் அடங்கிய பிரம்மாண்டமான A.C **வசதிகள் நிறைந்த** ஆஸ்பத்திரி ஒன்றை **பல கோடிகள் செலவில்** மிக பிரம்மாண்டமாக கட்டி முடித்திருக்கிறார். அந்த ஆஸ்பத்திரி கட்டிடபணி பூர்த்தியானதா என்பது எனக்கு தெரியாது.

சுற்றிலும் உள்ள ஏழை **கிராம மக்கள்** அப்பல்லோ - CMC வெல்லூர் என்று போகாமல் சகல வியாதிக்கும் **நாலுமாவடியிலேயே** வைத்தியம் செய்ய மிகவும் **உயர்ந்த படிப்பு படித்த** டாக்டர்களால் அந்த ஆஸ்பத்திரியில் **சிகிச்சை அளிக்கப்படும்** என்று அறிவித்தார்.

**இப்போது கேள்வி என்ன வென்றால் ?**

இத்தனை **உயர்ந்த வசதிகள்** நிறைந்த **சூப்பர் ஸ்பெஷாலிட்டி** ஆஸ்பத்திரியில் **ஏழை கிராம** மக்களுக்கு **இலவச வைத்தியம்** செய்ய முடியுமா? அப்படி **இலவச வைத்தியம்** செய்தால் நல்ல மருந்து கொடுத்து, வைத்தியம் அளிக்கவும் **ஆப்பரேஷன்** செலவும், **அதிகம் ஆகுமே!** அதிகம் படித்த டாக்டர்கள் சிகிச்சைக்கு கொடுத்தால் அதற்கு பணம் அதிகம் செலவாகுமே! பணத்துக்கு கிராம மக்கள் என்ன செய்வார்கள் ?

ஆஸ்பத்திரியில் **சரியான வருமானம்** இல்லாமல் போனால் மிகவும் படித்த **டாக்டர்களுக்கு** அவர்கள் **படிப்புக்கு ஏற்ற சம்பளம்** எப்படி கொடுப்பார்? அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டாமா? இந்த **பணத் தேவைகளை** யார் சந்திப்பார்? வியாதியஸ்தரிடமிருந்து மிக அதிக பணம் வசூலித்தால்தான் ஆஸ்பத்திரியை தொடர்ந்து நடத்த முடியும். அப்படியானால் கிராம மக்களுக்காகத்தான் விலை உயர்ந்த வேலைபாடுள்ள ஆஸ்பத்திரி கட்டினேன் என்றாரே? பதில் என்ன ?

சகோ. D.G.S. **தினகரனின் காருண்யா யுனிவர்சிட்டி** ஏழை மக்களுக்காகவே, **டொனேஷன் வாங்காமல்** இலவசமாக கல்வி அளிக்கப்படும் என்றுதானே அவர தன் **பிரசங்கத்திலும் இயேசு அழைக்கிறார் பத்திரிகையிலும்** அறிவித்தார். **பொய் சொல்லித்தானே** மக்களிடம் **பணம் கேட்டார். இளம் பங்காளர்** திட்டம் என்பதை **கர்த்தர் சொன்னார்** என்று **பொய் சொல்லிதானே** ஒரு குழந்தைக்கு, ஒரு பிள்ளைக்கு ரூ. 2000/- வாங்கினார். எத்தனைகயோபேர் ரூ. 2000/- கொடுத்து ஏமாந்தனர். என்பதை நாம் அறிவோமே!

நான் இதை **ஜாமக்காரனில் காருண்யா கல்லூரி** தொடங்கும் போதே மக்களை **எச்சரித்தேன்.** ஆனால் இப்போதுதான் பலருக்கு உண்மை தெரிய புத்தியும் வந்தது. **தினகர்** ஒரு **வியாபாரியானார்** என்று மக்கள் உணர்ந்தவுடன், **அந்த கூட்டம்** அப்படியே சகோ. **மோகன் C. லாசரஸ்** பக்கம் திரும்பியது. கடைசியில் **இவருக்கும்** கண் மூடிதனமாக **மக்களும், வியாபாரிகளும் காணிக்கைளை கொட்டி கொடுத்து** மோகன் C. லாசரஸ்சையும் **கிறிஸ்தவ வியாபாரி** ஆக்கிவிட்டார்கள்.

இன்று **வருமானம் உள்ள தொழில்** இரண்டு - ஒன்று பள்ளிக்கூடம், **இஞ்ஜினியரிங் காலேஜ்,**

**மெடிக்கல் காலேஜ்** கட்டுவது. அடுத்தது நாலுமாவடியில் உள்ள **சூப்பர் ஸ்பெஷாலிட்டி** போன்ற **ஹாஸ்பிட்டல் கட்டி** நல்ல வருமானம் பெறுவது.

சகோ. மோகன் C. லாசரஸ்ஸின் வீழ்ச்சிக்கு காரணங்களில் ஒரு சிலதை மட்டும்தான் எழுதினேன். **வாசகர்கள்** இனியாவது **ஜெபத்தில் பெயர் சொல்லி அழைக்கும்** எந்த ஊழியரையும் நம்பி ஏமாந்துபோக வேண்டாம். **அன்னிய பாஷை** பேசும் ஊழியர்களையும், குறிப்பாக சபை மக்களையும் ஜெபிப்பவர்களையும் பார்த்து **யார் அன்னிய பாஷையில் பேசுங்கள்** என்ற அறிவிக்கிறார்களோ! **அவர்களை அறவே நம்பவேண்டாம்.**

**கர்த்தர் சொல்ல சொன்னார்** என்று கூறும் **எந்த ஊழியரையும்** நம்பாதீர்கள் **அப்படப்பட்டவர்களை சபையில் பேசவும் அழைக்காதீர்கள். வசனம்** இப்படி சொல்கிறது என்று கூறும் **ஊழியர்களை** ஓரளவு நம்பலாம். தெளிவு பெறுங்கள் ஜாக்கிறதை !

பால் யாங்கிசோ அவர்கள் ஆரம்பத்தில் **நியூஸ்லாந்தில்** ஓக்லாந் நகரில் **அசம்பளிஸ் ஆப் காட்** சபையில் சாதாரண அங்கத்தினராக இருந்தவர். அங்குதான் **பரவச ஆராதனை, அன்னிய பாஷைகளை** கற்றுக்கொண்டார்.

**பால் யாங்கிச்சோ** பணத்தை இரட்டிப்பாக்க ஆசைப்பட்டு சபைமக்கள் அளத்த காணிக்கை பணத்தை **ஷேர் மார்க்கெட்டிலும்,** வியாபார **பங்குதாரராகவும்** மாறி **ஜெயிலிலும் அடைக்கப்பட்டார்.** அதன் பிறகு விடுதலையான உடனே முதலாவது **தன் பெயரை மாற்றி** புது பாஸ்போர்ட் வாங்கினார்.

சபை மக்களின் காணிக்கை பணத்தில் **பெரும் ஊழல்** செய்து அதற்கு சபை மக்களிடம் கூறிய அவரின் பதில் என்ன தெரியுமா? நம் சபைக்கு பணம் சேர்க்கத்தான் காணிக்கை பணத்தை **இரட்டிப்பாக்கி** நம் சபையை விரிவாக்கவும், சபை மக்களுக்கும், உலகத்தில் பல ஏழை நாடுகளுக்கு நம் மூலம் பண உதவி செய்து சமூக பணி செய்யவே நான் அந்த **தவறை செய்தேன்,** என்னை மன்னித்துவிடுங்கள் என்று பகிரங்க மன்னிப்பு கேட்டார்.

இந்த செய்திகள் உலக நாடுகளிலும் பரவியது என்றாலும் நம் இந்திய கிறிஸ்தவர்களில் அதே மாதிரி இயேசுவின் பெயரில் **பண ஊழல்** செய்யும் பல ஊழியர்கள் உண்டே. அப்படிப்பட்ட ஊழியர்களில் சகோ. D.G.S. தினகரனும் ஒருவர். ஆகவே **பால் யாங்கிச்சோவை** இந்தியாவுக்கு வரவழைத்து **சென்னை மெரினா கடற்கரையில்** பெரும் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். கூட்டம் திரளாக சேர்ந்தது. ஆனால் படுதோல்வியில் முடிந்தது. தெய்வ பிரசன்னம் எடுபட்டு போனது.

## ஜாமக்காரன் :

இதை எழுதும் Dr. புஷ்பராஜ் ஆகிய எனக்கும் இதே போன்ற **பண சோதனை** உண்டானது. நான் சென்று வந்த 162 தேசங்களில் **என்னை பிரசங்கிக்க அழைத்த** பல நாடுகளில் உள்ள சபைகள் எனக்கு **பண உதவி** செய்ய முன் வந்தன. **சபைகள்** ஆரம்பிக்கவும், **அனாதை** பிள்ளைகள் வளர்த்தும் **விடுதிகள்** நடத்தவும், **வயது முதிர்ந்தோர்** இல்லங்கள் இந்தியாவில் பல இடங்களில் துடங்கவும் ஊக்குவித்தனர்.

ஆண்டவரின் பெரும் கிருபை என்னவென்றால் **எனக்குள்ளும்** என்னோடும் **வாழும் கர்த்தராகிய** இயேசுகிறிஸ்து அந்த வலையில் நான் விழாமல் என்னை காப்பாற்றினார். நான் ஊழியம் தொடங்கிய 1964ம் வருடம் முதல் பரிசுத்தாவியானவர் மூலமாய் எனக்குள் ஏற்படுத்திக்கொண்ட திடமான தீர்மானம் என்னவென்றால் **என் ஊழிய எல்லையை விரிவடைய செய்யக்கூடாது என்பதே** ! பலர் அதை முட்டாள்தனம் என்றனர். எப. 13:5 **நீங்கள் பண ஆசையில்லாதவர்களாக நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று** எண்ணுங்கள் (காரணம் ) **நான் உன்னைவிட்டு விலகுவது இல்லை, உன்னை கைவிடுவதுமில்லை.** என்ற வசனம் மூலம் என்னை தெளிவுபடுத்தினார்.

முதலாவது கர்த்தர் எனக்கு கொடுத்த தாலந்து எவ்வளவு என்றும் **என்ன தாலந்து எனக்கு உண்டு** என்றும் எனக்கு தெரியும். என் ஊழியம் 1969ம் வருட முதல் **விரிவடைய ஆரம்பித்தது.** 1970 முதல் **பல வெளி நாடுகளிலிருந்து அழைப்புகள்** வர ஆரம்பித்தது.

ரயிலில் **டேனிஷ்பேட்டை** பெத்தேல், காடையாம்பட்டி போன்ற கிராமங்களில் என் ஆஸ்பத்திரி வருமானமும் விரிவடைந்தது. அதன்பின **ரயில் பயணம் நின்றது.** கர்த்தர் எனக்கு1962 மாடல் (Royal Enfield என்ற கம்பனி Bullet, Made in England) புல்லட் **மோட்டார் பைக்கில்** செல்ல ஒரு நபர் மூலம் உதவினார். **இன்று வரை அந்த வண்டியைத்தான் உபயோகித்துக்கொண்டிருக்கிறேன்.** பத்திரிக்கை ஊழியத்துக்கு முதலாவதாக (Bajaj Three Wheeler) **ஆட்டோ ரிக்ஷா** மாதத் தவனையில் புதிதாக வாங்கினேன். அதுவே என் குடும்ப வாகனமாக மாறி நானே **டிரைவராக ஓட்டி** உபயோகித்தேன். ஆட்டோ **ஆம்னி வேனாக** (2nd hand) மாரியது. அதையும் விற்று **மாருதி 800 கார்** பழையது வாங்கினேன். சில வருடத்தில் அதையும் விற்று ஒரு கத்தோலிக்க பிஷப்விடமிருந்து Falio Fiat என்ற **கார் வாங்கி** பல வருடங்கள் நாங்கள் குடும்பமாக உபயோகித்தோம். அதையும் விற்று கடந்த நான்கு வருடமாக Nano என்னை **தவளை குட்டி கார்** வாங்கினேன். இன்று வரை அதுதான் எங்கள் குடும்ப வாகனம். அதிலேயே மலை ஊழியத்துக்கும் கோயமுத்தூர், ஆனைக்கட்டி ஆகிய தூர இடங்களுக்கும் பயணித்தேன்.

**என் ஊழிய எல்லையை** வகுத்துக்கொண்டேன். 1) சுவிசேஷ ஊழியம் 2) மலை ஊழியம் 3) **ஜாமக்காரன்** பத்திரிகை ஊழியம் . அவ்வளவுதான் **என் ஊழிய எல்லையாகும்.** நாம் ஊழியத்திலும், வாழ்கையிலும் நாம் **கர்த்தருக்கு உண்மையாய்** இருந்தால் - **கர்த்தரும் நமக்கு உண்மையாய்** இருப்பார்.

என் வாசகர்கள் என்னையும் என் ஊழியத்தில் நான் பெரும் காணிக்கையில் நான் எவ்வளவு உண்மையாக இருக்கிறேன் என்று மிக நன்கு அறிவார்கள். ஆகவேதான் கடந்த 42 வருடங்களாக என் வாழ்க்கையிலும், என் ஊழியத்திலும் கடன் வாங்கும் சூழ்நிலை உண்டாகாமல் என் வாசகர்கள் மூலமாக மிகவும் சீராக கர்த்தர் என் ஊழியத்தை அற்புதமாக நடத்தி செல்கிறார்.

இந்த **கொரோனா தொற்று** பிரச்சனை நேரத்தில் **வேலையில்லாது தொழில்** செய்ய முடியாது **கூலி வேலைக்கும் போக முடியாத** சூழ்நிலை இந்தியா எங்கும் உண்டானபோது **என் வாசகர்களில் சிலரும்** பாதிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் **எனக்கு அவர்கள் அனுப்பிக்கொண்டிருந்த** காணிக்கையை **நிறுத்தவும் இல்லை. குறைக்கவும் இல்லை.** யாருக்கு கிடைக்கும் இந்த பாக்கியம், கிருபை, இது கிருபையேயல்லாது வேறில்லை !

இவைகளை இந்த கட்டுரையில் சேர்க்க காரணம் எனக்கு பழக்கமான வாசகர்களும் **முகம் தெரியாத** வாசகர்களும் உண்டு. அவர்களின் பெற்றோர் எனக்கு அனுப்பிக்கொண்டிருந்த **காணிக்கையை** பெற்றோர் மரித்தபின்னும், நான் எதிர்பார்க்காமல் **அவர்களின்** பிள்ளைகள், **பேரப்பிள்ளைகள்** அதே அளவும், **அதற்கு கூடுதலாகவும்** காணிக்கை எனக்கு அனுப்புவதை **தொடர்ந்தார்களே** அவர்கள் குடும்பமாய், **இரண்டு சந்ததிகளாய்** காணிக்கை எனக்கு அனுப்புவதை **அவர்கள் நிறுத்தவில்லை** என்பதை அறியும் போது **கர்த்தரை வாய்விட்டு துதிக்காமல் எப்படியிருக்க முடியும் !** கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

சகோ. D.G.S. தினகரனுக்கும். சகோ. மோகன் C. லாசரஸ்க்கும் அவர்களின் ரசிகர்கள் பணத்தை அளவில்லாமல் அள்ளி கொடுத்ததால்தானே, **காருண்யா** கல்லூரி, **திறப்பின வாசல், சூப்பர் ஸ்பெஷாலிட்டி** ஆஸ்பத்திரி, **ஜெப மலை** இப்படி நிறைய திட்டங்களை தொடங்க வேண்டியதானது.

அதே சோதனை எனக்கும் வந்தது. என் ஊழிய தேவைக்கு மேல் **மிக அதிகமாக காணிக்கை வந்தது.** கூடவே **பயமும் வந்தது.** எங்கே என்னை இந்த காணிக்கை பணம் **என் கர்த்தரிடமிருந்து என்னை பிரித்துவிடுமோ?** என் **சுபாவம் மாறிவிடுமோ?** என் ஜெபத்தில் **உற்சாகமும் பாரமும்** இல்லாமல் போய்விடுமோ ! என்று பயந்தேன்.!

தேவைக்குமேல் எனக்கு வரும் **பணத்துக்கு புதிய ஊழியம்** தொடங்கலாமே என்ற **ஆலோசனையும் நடுநடுவே வந்தது.** உடனே என் ஊழிய எல்லை **விரிவடைய போகிறது** என்று உணர்ந்தேன். உடனே தைரியமாக எந்த ஊழியர்களும் **இதுவரை அறிவிக்காத அறிவிப்பை** வெளியிட்டேன். வாசகர்கள் வரும் மூன்று மாதங்களுக்கு எனக்கு காணிக்கை அனுப்ப வேண்டாம். என் எல்லைக்குமேல் ஊழியம் செய்ய நான் விரும்பவில்லை என்று எழுதினேன்.

அதை வாசித்த பல ஊழியர்கள் மிகவும் **ஆச்சரியப்பட்டார்கள்.** என் நெருங்கின ஊழிய நன்பர்கள் **அதிர்ந்து போனார்கள்.** என் வாசகர்கள் என்னை **நன்றாக அறிந்தவர்களானதால்** காணிக்கை தொகையை **மிகவும் குறைத்து** அனுப்பினார்கள். அப்போதும் அவர்கள் காணிக்கை **அனுப்புவதை நிறுத்தவில்லை.** இரண்டு மாதங்களில் நிலைமை சரியானது. நிலைமை சரியான விவரத்தை என் வாசகர்களுக்கு நான் அறிவிக்கவேயில்லை. ஆனால் இரண்டு மாதத்துக்குபின் வழக்கம்போல் அவர்கள் அனுப்பும் தொகையை அதிகமாக்கி அனுப்ப தொடங்கினார்கள். இது ஆவியானவரின் கிரியையே அல்லாமல் வேறென்ன ?

ஆகவே சகோ. D.G.S. தினகரனாகட்டும், சகோ. மோகன் C. லாசரஸ் ஆகட்டும் காணிக்கை, தங்கள் **ஊழிய தேவைக்கு மேல்** பணம் வர அரம்பிக்கும் போதே, போதும் தயவு செய்து பணம் அனுப்புவதை **நிறுத்துங்கள்** அல்லது **குறைத்துகொள்ளுங்கள்** என்று அறிவித்திருந்தால் **வியாபார ஊழியத்தை** செய்யாமல் இருந்திருக்கலாமே. அவர்கள் ஆத்துமாவும் காப்பாற்றப்பட்டிருக்குமே !

**பால்யாங்கிச்சோ** சபைக்காகத்தான் **சபை மக்கள்** செலுத்திய **காணிக்கை பணத்தை இரட்டிப்பாக்கி சபைக்கே செலவிடதான்** முயன்றேன் என்றது. இவர் **கர்த்தருக்கு உதவிசெய்வது போன்றதாகும்.** கர்த்தர்தான் **நமக்கு உதவவேண்டும்,** நம் உதவி **அவருக்கு தேவையில்லை.**

**சகோ. தினகரன் குடும்பம்** இந்தியாவின் **பணக்காரர்களில் 7வது இடத்தை** பிடித்திருப்பதாக செய்தி வருகிறது. **சகோ. மோகன் C. லாசரசும்** அந்த பணக்கார ஊழியர்களில் அந்தஸ்தில் பட்டியலில் வராமல் இருக்கவே இந்த கட்டுரையை **பகிரங்கமாக,** வெளியரங்கமாக **எழுதினேன்.** வசன உபதேசத்துக்கு விரோதமாக **நான் கட்டுரையின் ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டு வந்த** பல விஷயங்களில் சகோ, மோகன் **C.** லாசரஸ் விழுந்துபோனதால்தான் அவர் நடத்திய TV **உபவாச ஜெபம்** பயனற்று போனது என்றேன். மற்ற விசுவாசிகளையும் தவறான பாதைக்கு வழி நடத்திவிட்டார் என்றேன்.

குறிப்பு : சகோ. மோகன் **C.** லாசரஸ் அவர்களின் அபிமானிகள் நான் இப்போது எழுதியது **தவறு என்று** அறிந்தாலோ **பொய் என்று நீங்கள்** சந்தேகப்பட்டாலோ நிச்சயம் என் மீது **வெறுப்பு உண்டாகும்.** ஆகவே உங்கள் வெறுப்பு **என் பத்திரிகை** மீது திரும்பும். அப்படிப்பட்டவர்கள் **ஜாமக்காரன் வேண்டாம்** என்று எனக்கு எழுதினால் போதும். மோகன் **C.** லாசரஸ் உபதேசத்தை உண்மை என்று நம்புபவர்கள் எனக்கு **அனுப்பும் காணிக்கையும்** நீங்கள் நிறுத்த உங்களுக்கு உண்டு. **வசனத்தை ஒப்பிட்டு தெளிவு பெறுங்கள்**

## ஜாமக்காரன் வெளிவர தாமதம் ஏன் ?

**பணப் பிரச்சனை** காரணம் அல்ல. **அச்சகங்கள்** மூடப்பட்டன,சென்னையிலிருந்து **பார்சல் லாரிகள்** ஓடவில்லை. ஆகவே இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் ஜாமக்காரன் தாமதமாகவே வெளிவரும் என்பதை அறிவிக்கிறேன்.

## வெளிநாட்டில் வசிக்கும் வசகர்களுக்கு

சில மாதங்களாக விமானங்கள் ஓடப்படாததால் **3 மாத ஜாமக்காரன்** உங்கள் விலாசம் ஒட்டப்பட்டு தபாலில் அனுப்பாமல் வைத்திருக்கிறேன். **கம்ப்யூட்டர்** வைத்துள்ளவர்கள் உங்கள் email ID அனுப்பினால் pdf மூலமாக நீங்கள் எடுத்து வாசிக்கும் வகையில் நான் அனுப்புவது உங்ளுக்கு நல்லது. இந்தியாவில் உள்ளவர்களும் கம்ப்யூட்டர் whatsapp வைத்திருப்பவர்கள் இந்த ஆலோசனையை பின்பற்றலாம்.

# தக்க சமயத்தில் உண்டான விளம்பரம் இல்லாத மனித நேயம்



சகோ.
லிவிங்ஸ்டன் நல்லதம்பி

**பசியாயிருந்தேன் எனக்கு போஜனம் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தீர்த்தீர்கள். அந்நியனாயிருந்தேன் என்னை சேர்த்துக்கொண்டீர்கள். என் சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ அதை (இயசேுவாகிய) எனக்கே செய்தீர்கள் என்று இயேசு கூறினார்.** மத். (25:35,40)

2020 மார்ச் மாதம் 22ம் தேதி **கொரோனா வைரஸ்** கடும் வேகத்தில் பறவியதால் தமிழ்நாடு முழுவதும் **ஊரடங்கு** உத்தரவும், **144 சட்டமும்** அமல்படுத்தப்பட்டது. கடைகள், தொழில் சாலைகள், பெரிய மில்கள் ஓட்டல்கள், சாதாரண பெட்டிக்கடை முதல் டீ கடை வரை அனைத்தும் மூடப்பட்டது, வாகனங்கள் எதுவும் ஓடவில்லை.

எதிர்பாராத இந்த ஊரடங்கால் நாடே முடங்கி மக்கள் அவரவர் **வீடுகளில் அடங்கிப் போனார்கள்.**

இந்த சூழ்நிலையில் செய்வதரியாது லட்சக்கணக்கான **வெளி மாநிலத்து** தொழிலாளர்கள் தின கூலி வேலை செய்பவர் சாப்பிடவழியின்றி ஆங்காங்கே **வீதியோரங்களில்,** பாலங்களுக்கு அடியில் படுத்து கிடந்தார்கள். **பட்டினி காட்சிகள்** உச்ச கட்டத்தை அடைந்த 2020 ஏப்ரல் 7ம் தேதி சென்னையில் **சகோ. லிவிங்ஸ்டன் நல்லதம்பி** (Charted Accountant) அவர்களின் மனதில் பசியால் வாடும் இந்த மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே என்ற இரக்க உணர்வு உண்டானது. சகோதரன் அவர்கள் CSI Wesly English Church **செயலாளராக** சபைப் பணியில் நீண்டகாலம் பணியாற்றுகிறார்.

இவர் உடனே ஜெபித்து தனக்கு தெரிந்த **நண்பர்கள்** சிலரோடு தன் உள்ளத்தின் பாரத்தை பகிர்ந்து கொண்டார். அத்தனைபேரும் பெரும் உற்சாகத்தோடு உடனே உற்சாகத்தோடு இறங்கினார்கள். சகோ. லிவிங்ஸ்டன் அவர்கள் தன்னுடைய சொந்த பணத்திலிருந்தும் **நண்பர்கள்** கொடுத்த பணத்திலும் **பட்டினி கிடக்கும்** அவர்களுக்கு **முதல் உதவியாக பிரட்** Bread **பண்** Bun) வேக வைத்த **முட்டை** ஒரு **பாட்டில் தண்ணீர்** இவைகளை ஒரு நீண்ட கவரில் போட்டு சுமார் 1000 நபர்களுக்கு கொண்டுபோய் கொடுத்தார்கள்.

இந்த பசிக்கும் செய்யும் உதவியை குறித்து இன்னும் சில குடும்பத்தினரோடு இவ்விவரம் அறிவிக்க அடுத்த உதவியாக சாப்பாடு சமைத்து வட மாநில தொழிலாளர்களுக்கும், பிச்சைகாரர்களுக்கும் பொட்டலமாக்கி கொடுத்து அவர்களின் பசியாற்றினார்கள். குடும்பமாக உள்ளவர்களுக்கு சமைத்து சாப்பிடும் வகையில் திட்டமிட்டார்கள். **இங்கிலீஸ் வெஸ்லி சர்சை மையமாக வைத்து** சிலர் **அரிசி, கோதுமை மாவு, காய்கறிகள்** சமையல் என்னை, சீனி (சர்க்கரை) பருப்பு, டீதூள், சோப்பு, வாழைப்பழம் போன்ற உணவு வகைகளை, சமைக்கும் பலசரக்கு சாமான்களை ஒவ்வொரு **பெரிய பைகளில் நிறப்பி** குடும்பத்துக்கு **ஒரு வாரத்துக்கு** தேவையான அளவு குடும்பத்துக்கு ஒன்றாக கொடுத்தார்கள். சகோ. லிவிங்ஸ்டன் அவர்களின் நண்பர்கள், சபை வாலிபர்கள் யாவரும் பல குழுக்களாக பிரிந்து அவரவர் வாகனங்களில் பொருட்களை ஏற்றி **வடஇந்திய தொழிலாளி குடும்பத்துக்கும்** வேலை இழந்த மற்ற குடும்பங்களுக்கும் அவர்கள் வீடு தேடி குடிசைவாசிகளுக்கும் சாப்பாட்டு பொருள்கள் வினியோகித்து வந்தார்கள்.

இவர்களின் **அடுத்த திட்டமாக** இவர்கள் சந்தித்த அனைவரையும் **இங்கிலிஸ் வெஸ்லி அலயத்துக்கு** வாரம் ஒருமுறை நேரில் வர சொல்லி அவர்களே தங்களுக்கான **1 மாத உணவு** பொருளை வாங்கி செல்லும் **ஏற்பாட்டை** மிக சிறப்பான திட்டத்தோடும் **ஆலய ஆயர்** அனுமதியுடன் கடந்த **மூன்று மாதங்களாக** இந்த உயர்ந்த நல்ல சேவையை **தக்க சமயத்தில்** செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் இந்த செயல்களை கேள்விப்பட்ட பல குடும்பத்தினர், **கிறிஸ்தவர் அல்லாத** குடும்பத்தினரும் தங்கள் உதவிகரம் நீட்டினார்கள். நாங்கள் செய்ய முடியாததை நீங்கள் செய்வதால் **கோரோனா ஊரடங்கு** முடியும்வரை அந்த ஏழைகள் மீண்டும் தொழில் தொடங்கும் வரை நாங்களும் **உதவுவோம்** என்று உற்சாகப்படுத்தினர். சிலர் வீட்டு வாடகை கட்ட முடியாத நிலையில் இருப்பதை அறிந்து சுமார் 20 **குடும்பங்களுக்கு** வீட்டு **வாடகை பணம்** கொடுத்தார்கள்.

பெந்தேகோஸ்தே சபை பாஸ்டருக்கும் சாப்பாட்டு உதவி

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் ஊழியம் இல்லாமல் வீட்டில் அடைந்து கிடக்கும் ஊழியர்கள் , அவர்கள் எந்த சபையாக இருந்தாலும் குறிப்பாக தனி சபை நடத்தும் ஏழை பாஸ்டர்கள் யாவரையும் வெஸ்லி சபைக்கு வரவழைத்து ஜெபித்து ஒரு மாத சாப்பாட்டு பலசரக்கு சாமான்களையும் சிறு பணதொகையும் கொடுத்தது யாரும் செய்யதா மெச்சதகுந்த செயலாகும்.

**நற்கிரியைகளை செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்.** எபே. 2:10 கர்த்தர் தாமே சகோ. லிவிங்ஸ்டன் அவர்களையும் அவரோட ஒத்துழைத்த நண்பர்களையும், இந்து குடும்பங்களையும், அண்டை கிறிஸ்தவ குடும்பங்களையும் ஆசீர்வதித்து காப்பாராக.

# பிள்ளைகளின் ஆன் லைன் படிப்பு

**பள்ளிக்கூடம்** மூடப்பட்டது, **கல்லூரி** மூடப்பட்டது. **ஆசிரியர்கள்** கூட பிள்ளைகள் வீட்டுக்கு வந்து பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த சூழ்நிலையில் **மொபைல் ஜூம்** மூலம் பாடம் சொல்லி கொடுக்க ஆரம்பித்துவிட்டனர். அனால் **வாட்ஸ்ஆப்** உடன்கூடிய **மொபைல் இல்லாத** கிராமத்து **ஏழை பிள்ளைகள்** பெரும் மன உளைச்சலுள்ளாகிறார்கள்.

**கேரளாவில்** ஏழை மனைவி கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தும் **தன் தாயால் மொபைல் வாங்க** பணம் இல்லை என்று அறிவாள். **தகப்பனும் இல்லை.** இப்படிப்பட்ட சூழ்நிலையில் **தன் தாய்க்கு தான் பாரமாயிராதபடியிருக்க தற்கொலை** செய்த செய்தி வைரலாக பரவி சோகத்தை ஏற்படுத்தியுள்ளத.

தமிழ்நாட்டில் உள்ள மாணவ மாணவிகளுக்கு அந்த மாணவியின் நிலை வந்துவிடக்கூடாது. ஜெபிப்போம். த**மிழ்நாட்டு அரசாங்கம்** முன்னான் முதல்வர் மரித்த செல்வி **ஜெயலலிதா** அவர்கள் பள்ளி பிள்ளைகளுக்கு **மடிக் கணினி** Laptop **இலவசமாக** அளித்தது போல் இந்த சூழ்நிலையில் அவைகளை பெற்றுகொண்ட பிள்ளைகளுக்கு பெரும் ஆறுதலாக இருக்கிறது. வேலை இல்லாத தொழில் இல்லாத பெற்றோர் **பணக் கஷ்டம்** அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலையில் அரசாங்கம் நம்மிடம் வரி வாங்கியுள்ள நம் இந்த இக்கட்டான நிலையில் பிள்ளைகளுக்கு உதவ வேண்டியது அவசியமல்லவா ! **கேரள மாணவியின் மரணம்** நம் நாட்டில் நடக்கும்முன் போர் கால நடவடிக்கையாக (மடிக் கணினி) Laptop நம்முடைய தமிழ்நாட்டு கிராமத்தில் உள்ள பிள்ளைகளுக்கு கிடைக்க ஜெபிப்போம்.

**பெற்றோர்களுக்கு :** உங்கள் பிள்ளைகளுக்கு **மொபைல் ஜூம்** வசதி உள்ள மொபைல் வாங்கி கொடுப்பதைவிட **Laptop வாங்கி கொடுப்பது** மிகவும் நல்லது. பிள்ளைகள் Laptopயில் எதை **பார்க்கிறார்கள்** என்பதை **பெற்றோர் கவணிக்க முடியும்.** மொபைல் வாங்கி கொடுத்தால் அவர்கள் **பாடம் படிக்கிறார்களா** Game விளையாடுகிறார்களா அல்லது மற்றவர்களுடன் **சேட்டிங் மூலம்** சம்பாஷிக்கிறார்களா என்பதை கவனிக்க முடியாது. இதில் பிள்ளைகளுக்கு பெரும் சோதனை இருக்கிறது ஜாக்கிறதை !

## தேவ கோபம்பற்றி எறிகிறது.....

**கொரோனா** கிருமி உலகெங்கும் பரவி பெரும் அழிவை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. உலக மக்கள் கோடிக்கணக்கில் செத்து மடிகிறார்கள். – **கொரேனா அழிவிலிருந்து** தப்புவிப்பார் **ஒருவரும் இல்லை.** வந்துகொண்டிருக்கும் அழிவுக்கு பின்னால் **மற்றொரு அழிவு படை எடுத்து வந்துகொண்டிருக்கிறது.** அதுதான் பயிர்களை அழிக்கும் **பாலைவன வெட்டுக்கிளி**, கோடி கோடியாய் பல நாடுகளை கடந்து **இந்தியாவுக்குள்ளும்** நுழைந்துவிட்டது.

வேதம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எச்சரித்தது. யோவேல் 1:2–4, **தேசத்தின் சகல குடிகளே** செவி கொடுங்கள்.

**பச்சை புழு** விட்டதை **வெட்டுக்கிளி** தின்றது. – **வெட்டுக்கிளி** விட்டதை **பச்சக்கிளி** தின்றது. – **பச்சை கிளி** விட்டதை **முசுகொட்டை** பூச்சி தின்றது. வயல்வெளி பாழாயிற்று, **விளைச்சல்** அழிக்கப்பட்டது. **எண்ணை** வரண்டுபோயிற்று. பயிரிடும் குடிகளே வெட்கப்படுங்கள்.

**சந்தோஷம்** மனுபுத்திரரைவிட்டு ஒழிந்துபோயிற்று. அடுத்த அழிவு படையெடுத்து வந்துவிட்டது. **உயிர்கொல்லி வண்டுகள்.** புது மாதிரி **வண்டுகள்** படையெடுத்து வந்துவிட்டன. அது **எலிகளை** கொட்டியவுடன் செத்துப் போகிறது. மனிதர்களையும் தேடி வந்துவிட்டது. **வெளி நாடுகளில்** கொரேனா ஊரடங்கு நீங்கி வெளியிலே திரிந்த மக்கள் இந்த உயிர் கொல்லி வண்டுகளைக் கண்டு திரும்பவும் **வீட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டார்கள்.** யோவேல் 1:4,4,10

**சீக்கிரம் மனந்திரும்பி விக்கிர ஆராதனையை இந்தியாவைவிட்டு நீக்கி – உயிருள்ள தெய்வமாகிய இயேசுவிடம் உபவாசத்தோடு அழுது புலம்புங்கள். பஞ்சம் தலைவிரித்தாடும் காசு இருந்தும் சாப்பிட உணவு வாங்க முடியாத நிலை மறுபடியும் வரப்போகிறது. ஜெபிப்போம்.**

**MAY 2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.

# இயேசு கிறிஸ்து தம்மிடமாய் அழைத்துக்கொண்ட தாசன்



சகோ. **பேட்ரிக் ஜோஷ்வா**

**சகோ. பேட்ரிக் ஜோஷ்வா** அவர்கள் கிறிஸ்து தமக்காய் நியமித்த வழியில் தன் ஊழிய ஓட்டத்தை முடித்தார்.

மரணம் வரை வெற்றிகரமாக சாட்சியுடன் தனக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை ஓடி முடித்து கர்த்தரின் பாதத்தில் சென்றடைந்தார். இவர் தாழ்மையுள்ள முன் மாதிரியுள்ள மிஷனரி ஆகும்.

FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் நீண்ட காலம் **பொதுச் செயலாளராகவும், பொருளாளராகவும்** ஊழியம் செய்து FMPB ஊழியத்தை வளர்த்தியவர். சகோதரன் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் **இடையன்குடி** என்ற ஊரில் 1939ம் வருடம் பிறந்து 2020 May மாதம் தனது **81வது வயதில்** ஊழிய ஓட்டத்தை முடித்தார்.

**ஜெப வீரர், தியாகி** என்றெல்லாம் அனைத்து மிஷனரிகளாலும் CSI அல்லாத **மற்ற சபை தலைவர்களாலும்** புகழப்பட்டவரும், முன் மாதிரி ஊழியராய் வாழ்ந்து காட்டிய சகோதரனை நினைத்து கர்த்தரை துதிக்கிறேன்.

இவர் தமிழ்நாட்டில் பாளையம்கோட்டை St. John's கல்லூரியிலும், சென்னை M.M.C. (தாம்பரம்) கல்லூரியிலும் தன் உயர் கல்வி படிப்புகளை படித்து LICயில் பணியாற்றினார். இவர் மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டபின் உயர் நிலைப்பள்ளியிலும், கல்லூரியிலும் ஜெப குழுக்களை உருவாக்கி ஏராளமான ஆத்துமாக்களை அந்த ஆரம்ப காலத்திலே ஆதாயம் செய்தவர். **பல மதத்தில்** உள்ள மாணவர்களை கிறிஸ்துவுக்கு நேராய் வழிநடத்தியவர்.

1964ம் வருடமே தன் உயர்ந்த பதவியில் வேலை செய்துகொண்டே FMPB நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் ஈடுபாடுகொண்டவரானார். 1977ம் வருடம் முழு நேர ஊழியத்துக்கு தன்னை ஒப்புக்கொடுத்து தன் உயர்ந்த பதவியை விட்டு விலகினார். சகோ. **எமில் ஜெபசிங்** அவர்களுக்கு பிறகு FMPBயின் பொது செயலாளர் பொருப்பை ஏறெடுத்தார். ஆரம்பத்தில் FMPBயில் பொருளாளராகவும் பணியாற்றினார்.

## ஜெப வாழக்கைக்கும் – தியாகத்துக்கும் முன் மாதிரி

தன் பிற்கால வாழ்க்கைக்கு என்றும் தன் குடும்பத்துக்கு என்றும் **வங்கியில்** எந்த **சேமிப்பும்** வைத்துக்கொள்ளாமல் தன் வேளையில் ஓய்வு பெற்றால் கிடைக்கக்கூடிய P.F. ஃபிராவிடண்ட பண்ட் பணம் அத்தனையும் மிஷனரி ஊழியத்தின் அவசர தேவைக்கு என்று கொடுத்துவிட்டார். சகோ. மனைவி சுசீலா (பட்டதாரி). நானும் கர்த்தருக்கு கொடுப்பதில் சளைத்தவரல்ல என்று தன் கணவரைப் போல் தன் கழுத்தில் உள்ள அத்தனை தங்க நகைகளையும் கழற்றி அப்படியே மிஷனரிக்கு அற்பணித்தார். கணவனும் மனைவியும் வெறும் கையாய் மிஷனரி ஊழியத்தை தொடங்கினார்கள். இவர்களுக்கு 3 ஆண் பிள்ளைகளும் 1 மகளும் உண்டு.

அத்தனை பிள்ளைகளையும் பட்டதாரிகளாக ஆக்க படிக்க வைத்தார். பிள்ளைகளின் படிப்புக்கான செலவை தான் வேலை செய்துகொண்டிருக்கும்போதே தன் PF பிராவிடண்ட் பணத்திலிருந்து **கடன் வாங்கி** 6 மாத்தில் அதை அடைத்து, மறுபடியும் PF **கடன் வாங்கி** 6

Suppliment 2

மாதத்தில் அதை அடைத்து இப்படியாக (உறவினர்களிடமோ வேறு யாரிடமும் கடன்படாமல்) தன் சொந்த உழைப்பில் 4 பிள்ளைகளையும் பட்டதாரிகளாக்கி அவர்களை மிஷனரி ஊழியர்கள் ஆக்கினார். பணத்தை செலவு செய்வதில் திட்டமிட்டு **கடன் வாங்காமல்** குடும்ப செலவுகளை செய்வதில் திறமை மிக்கவர்.

FMPBக்கு வரும் காணிக்கையிலிருந்து எந்த பணத்தையும் தன் **சொந்த செலவுக்**கு இவர் உபயோகித்ததில்லை. FMPB மிஷனரி பணிதளத்தை சந்திக்க நீண்டதூர **வட இந்திய பயனம்** மேற்கொண்டாலும் FMPB பணத்தில் பயன டிக்கட் வாங்கவும் பயப்படுவார். அந்த பணம் மக்கள் மிஷனரி உழியத்துக்காக மக்கள் கொடுத்தது ஆகும். அதிலிருந்து என் **சொந்த தேவைக்கு** பணம் எடுத்து செலவழிக்க மாட்டேன் என்பதில் உறுதியாக இருந்தார். தன்னை ஊழியத்துக்கு அழைக்கும் **ஜெப குழு தலைவர்கள்** இவருக்காக **பயன டிக்கட்** எடுத்து கொடுப்பார்கள்.

**சகோதரனின தியாகத்துக்கு** சிறு உதாரணம்.

நான் டெல்லி CSI **மலையாள சபை கண்வென்ஷன்** ஊழியத்தை முடித்து திரும்பின அதே ரயலில் சகோ. **பேட்ரிக்** அவர்களும் பயனம் செய்திருக்கிறார். நான் அதை அறியவில்லை. மதியம் புறப்பட்ட ரயில் இரவு முழுவதும் கழித்து காலை **நாக்பூர்** ஜங்ஷன் ரயில் நிலையம் வந்த சேர்ந்தது.

நான் தினசரி பத்திரிகை வாங்க பிளாட்பாரத்தில் இறங்கினேன். பேப்பர் வாங்கி நான் பயனம் செய்த **ஸ்லீப்பர் கோச்** நோக்கி சென்றபோது **ஜெனரல் கம்பார்ட்மென்டில்** கால் வைக்ககூட இடம் இல்லாத அளவு கூட்டம் நிறைந்த அந்த பெட்டியில் **கழிவரை** (டாய்லட்) **கதவு** பக்கமாய் சகோதரன் அவர்கள் **தரையில்** உட்கார கூட வசதியில்லாத நிலையில் **வேத புத்தகத்தை** திறந்த நிலையில் வைத்து சகோ. பேட்ரிக் அவர்கள் படித்துக்கொண்டிருப்பதை கண்டேன். அவரை கண்ட அந்த நிலையை கண்ட எனக்கு பெரும் மன வேதனையாக இருந்தது.

இரயில் பெட்டியின் கதவருகே நின்று நான் அவரை நோக்கி கைகளை அசைத்து காலை வணக்கம் கூறினேன். பிறகு **சாப்பிட்டீர்களா?** என்று கேட்டேன். ஒரு புன் சிரிப்புதான் பதிலாக இருந்தது. அதற்குள் ரயல் புறப்பட தொடங்கியது. நான் அடுத்த ஸ்டேஷனில் ரயில் நின்றவுடன் நான் **முட்டை பிரட்,** வாழைப்பழம், ஒரு **பாட்டில் தண்ணீரும்** வாங்கி அவர் அமர்ந்திருந்த ரயில்பெட்டிக்கு ஓடிச்சென்று அருகே உள்ளவர் கையில் கொடுத்து அவரிடம் கொடுக்க சொல்லிவிட்டு நான் என் கேரேஜில் ஓடி ஏறிக்கொண்டேன். ரயில் மறுநாள் அதிகாலை சென்னை வந்து சேர்ந்தது. நான் சீக்கிரம் இறங்கி அவர் இருந்த பெட்டிக்கு சென்றேன். அவர் இறங்கிய உடன் அவரை அழைத்துசென்று காப்பி வாங்கி இருவரும் குடித்தோம். நான் ஒரு 10 நிமிடம் உங்களோடு பேச வேண்டும் என்று கூறி மறு பிளாட்பாரத்தில் ஆள் கூட்டம் இல்லாத இடத்தில் அமர்ந்து பேசினேன்.

நீங்கள் **ஆசியாவிலேயே** பெரிய மிஷனரி ஸ்தாபனத்தின் உயர்நத பொருப்புளள பொதுச்செயலாளர் ஆகும். நீங்கள் **நேர சேமிப்புக்காக** விமானத்தில் பயனம் செய்யவோ **A.C ஸ்லீப்பர்** படுக்கையில் பயனம் செய்யவோ **உங்கள் பதவிக்கு அனுமதி உண்டு.** அப்படியிருக்க குறைந்தபட்சம் **சாதாரண ஸலீப்பர் கோச்சிலாவது** பயனிக்கலாமே ! ஏன் இந்த சிக்கனம் ! எனக்கு தெரியும் நீங்கள் என்ன பதில் கூறவீர்கள் என்று ! மிஷனரி ஊழிய பணம் அதை சிக்கனமாக செலவழிக்க வேண்டும் என்பீர்கள். இப்படி பலரிடம் கூறியதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உடனே அவர் குனிந்து சிரித்துக்கொண்டே பதில் கூற முயன்றார். ஆனால் நான் அவரை பேச விடவில்லை. மளமளவென்று நான் உணர்த்தபட்டதை அவரிடம் கூற ஆரம்பித்தேன்.

பிரதர் வேதத்தில் நீதி மொழிகளில் ஒரு வசனம் உண்டு. **மிதமிஞ்ஜின நீதிமானாக இராதே!** உங்களின் அளவுக்கு மீறின **சிக்கனம், தாழ்மை** உங்கள் உடல் நலத்தை பாதிக்கும் என்று

உங்களுக்கு தெரியாதா ? எவ்வளவு நீண்ட பயனம் செய்துள்ளீர்கள். கால் நீட்டக்கூட முடியாத நிலையில் நீங்கள் **கக்கூஸ் கதவு பக்கத்தில்** அமர்ந்திருந்தது என் மனதை மிகவும் வேதனை படுத்தியதுவிட்டது என்றேன்.

உடனே அவர் சிரித்துக்கொண்டே சேலத்திலிருந்து டெல்லி சென்று திரும்பிவர இருவழிகளுக்கும் Sleeper ரிசர்வ் செய்திருந்தேன். ஆனால் டெல்லியில் இரண்டு இடத்தில் முன் அறிவிப்பு இல்லாமல் இரண்டு கூட்டங்களுக்கு அங்குள்ள ஜெப குழு தலைவர்கள் அந்த கூட்டத்திலும் செய்தி கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்துவிட்டு என்னிடம் வருந்தி கேட்டுக்கொண்டார்கள். அந்த அன்பு தொல்லையை தவிர்க்கமுடியாமல் அந்த கூட்டத்தையும் முடித்து திரும்பினேன். அவர்களும் எனக்கு டிக்கட் ரிசர்வ் செய்ய முயன்றார்கள். இடம் கிடைக்கவில்லை. உடனே திரும்பவேண்டும் என்று நான் தான் கூறி **சாதாரண டிக்கட் வாங்கி** டெல்லி ரயில் **புறப்படும் இடம்** ஆனதால் **உட்கார இடம் கிடைக்கும்** என்று நினைத்து ஸ்டேஷன் வந்தால் கூட்டம் நிறம்பி வழிகிறதை கண்டேன். எப்படியோ உள்ளே நுழைந்து விடடேன். கடைசியில் டாய்லட் **அருகே இடம்** கிடைத்து அமர்ந்தேன் என்றார்.

நான் கூறினேன் FMPBயில் பலர் செய்யும் இப்படிப்பட்ட **அன்பு தொல்லை** காரணமாக உங்களைப்போல் பல ஊழியர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும். நீங்கள் FMPBக்கு **மிகவும் அவசியம். உங்கள் ஆரோக்கியம்** FMPB ஊழியத்துக்கு முக்கியம் என்றேன். ஜெபித்து பிரிந்து சென்றோம்.

ஆனால் அதே சமயம் சகோதரன் அவர்கள் அவர் தன் உடலை மிகவும் கவனமாக பார்த்துக்கொள்கிறார் என்பதையும் நான் அறிந்தேன். இந்த நிகழ்ச்சிக்கு பிறகு ஒரு நாள் டேனிஷ்பேட்டைக்கு போகும்முன் என் வீட்டுக்கு வந்திருந்தார். குளித்து சாப்பிட்டு அப்படியே டேனிஷ்பேட்டை போகும் திட்டத்தோடு வந்தார். குளிக்கும்முன் அவர் பணியனை கழற்றும்போது அவர் உடல் கட்டுமானம் மிகவும் பிரமாதமாக **சிக்ஸ்பேக்** என்று கூறுவார்களே அதைப்போல அவர் உடல் தசைகள் எல்லாம் ஜிம்முக்கு செல்வோரின் சரீரம் போல் இருந்தது. அவர் ஆரம்ப காலம் தொடங்கியே தினசரி யோகா போன்ற **உடற்பயிற்சி** செய்கிறார் என்பதை அறிந்தேன். மேலும் அந்த காலத்திலேயே அவர் **ஆண் அழகன்** போட்டியில் தன் தசைகளை காட்டி பரிசுகள் வாங்கியவர் என்பதையும் அறிந்தேன். அபபோது அவர் கூறினார் எல்லா FMPB வட இந்திய மிஷனரிகளுக்கும் தினசரி **உடல் பயிற்சியின்** அவசியத்தை கூறுவேன் என்று எனக்கும் வீட்டிலேயே செய்யும் உடல்பயிற்சியை குறித்த **படத்தோடு கூடிய புத்தகம்** ஒன்றை கொடுத்து சென்றார்.

☐ FMPBயின் பல சிக்கலான சமயங்களில் சிலரிடம் ஆலோசனை கூறி சமாதானப்படுத்த என்னை வட இந்தியாவின் சில இடங்களுக்கு சமாதான தூதுவராக என்னை அனுப்பினார். அந்த வகையில் Dr. **தேவதாஸ்,** Dr. **தேவவரம் சாம்ராஜ்,** Dr. **மாசிலாமணி** ஆகியவர்களோடு **சமாதான உடன்படிக்கைக்கு** பேச்சு வார்த்தை நடத்த என்னை **சூரத்துக்கு** அருகேயுள்ள வனப்பகுதியான **வானக** என்ற பணிதளத்துக்கு அனுப்பினார். அவர்களின் கருத்தில் ஒரு விதத்தில் நியாயம் இருந்தாலும் FMPB என்கிற ஸ்தாபனம் உடைந்துவிடக்கூடாதே என்ற ஒரே காரணத்தினிமித்தமாய் குறிப்பிட்ட விஷயத்தில் நான் அவர்களை சமாதானம் செய்ய முயன்றேன். அங்கு ஒரு இரவு துடங்கி விடிய விடிய உறங்காது குறிப்பிட்டவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தியது என் வாழ்க்கையில் முதலும் கடைசியுமாகும்.

FMPBயின் மேல் உள்ள **பாரத்தால்தான்** இந்த ஒரு **விஷயத்துக்காக மட்டும்** சேலத்திலிருந்து அத்தனை **ஆயிரம் மைகள்** பயனித்தேன். அதுவும் சகோ. **பேட்ரிக் ஜோஷ்வா** அவர்கள் மிகுந்த பாரத்தோடு போனிலேயே என்னோடு பேசி வேண்டிக்கொண்டு அப்படியே என்னை ஜெபித்து

அனுப்பினார். அன்று அவரின் உள்ளம் அந்த குறிப்பிட்ட பரச்சனைகளை நினைத்து எந்த அளவு உடைந்திருந்தது என்பதை நான் மட்டும் அறிவேன்.

## தியாகமும் சகிப்பு தன்மையும்

சகோதரன் பேட்ரிக் அவர்கள் தன் PF சேமிப்பு, மனைவின் நகைகள் அத்தனையும் மிஷனரி பணிக்காக கொடுத்த தோடு மட்டுமல்ல தன் **குடும்ப வீட்டையும்** அப்படியே FMPB மிஷனரி பணிக்காக **எழுதி கொடுத்துவிட்டார்** என்பது **சதாரண தியாகம் அல்ல**. மேலும் தன் 3 ஆண் பிள்ளைகள் ஒரு மகள் யாவரையம் மிஷனரி பணிக்கென்று அற்பணித்தார்.

அதில் முதல் மகன் (Mr. Jim Elliot) ஜிம் எலியட்டை ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள **மால்தோவா ஆதிவாசிகள்** மத்தியில் ஊழியத்துக்கு அனுப்பினார். அந்த மலைப் பகுதி முழுவதும் நிறைந்து **ஒருவித மலேரியா** ஆகும். அந்த **கொசு மூலமாய்** மகன் பாதிக்கப்பட்டு (Cerebral Malaria) மலேரியா வியாதியில் **மூளையும்** பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துபோனார்.

அடுத்து இடி போன்ற செய்தி தொடர்ந்தது. சகோதரனின் மனைவி Mrs. Suseela (சுசீலா) அவர்கள் **கேன்ஸர்** வியாதியால் **மரித்து போனார்.** சகோதரன் சோர்ந்து போகவில்லை. **இரண்டு மரணத்திலும்** சுற்றியுள்ளவர்கள் அழுதார்கள். ஆனால் அவரோ **அழாதபடி ஸ்தோத்திர பாடலை** பாடதொடங்கினார். **உள்ளத்தில்** அவர் **அழுதது கர்த்தருக்கு மட்டுமே** தெரியும். மீதியுள்ள மகள் Mrs. Shalom மகன்கள் Sabyne & Franco ஆகியோர்கள் **பீஹாரிலும், கல்கத்தாவிலும்** ஊழியம் செய்கின்றனர். மகள் சென்னையில் டீச்சராக பணி செய்கிறார்.

சகோ. **பேட்ரிக் ஜோஷ்வா** அவர்கள் பாடல் இயற்றவும் **இராகம்** அமைக்கவும் தெரியும். அவர் இயற்றி பாடிய பாடல்கள் எனக்கு படித்த பாடல்கள் இரண்டு !

1) ஜெபம் செய்திடுவோம்.

2) மனிதன் யார் என்று உலகில் **யாருக்குமே தெரியாது.** அவன் உருவம் (மட்டும்) கண்டு இவன்தான் என்று **சொல்லிவிடாதே** ! (அவனை) தள்ளி விடாதே!

அர்த்தமுள்ள இப்பாடல் வரிகள் ஆழமானது. ஒரு மனிதனை மேல் போக்காக கண்டு அவனை கணித்து விடாதே – அப்படியே அந்த மனிதனின் புறமே காணும் தோற்றத்தை வைத்து தள்ளி விடாதே !

சகோ. **பேட்ரிக் ஜோஷ்வா** அவர்களின் **பரிசுத்த** வாழ்க்கைகாகவும், அவரின் **தியாக** வாழ்க்கைக்காகவும் FMPB மிஷனரி ஊழியத்தில் அவரின் அற்புதமான **அர்பணிப்புக்காகவும்** தேவனை துதிப்போம். இந்த **குணாதியங்கள்** யாவும் **மரணம் வரை** அவர் வாழக்கையில் காணப்பட்டதுதான் **சிகரம் வைத்த சிறப்பு** ஆகும்.

சகோதரன் அவர்களின் மேற்கண்ட சிறப்புகளுக்காக தேவனை துதிப்போம். அவர் விட்டு போயிருக்கும் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். கர்த்தர் அவர்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் அருளுவாராக.

FMPBயின் **வரலாற்றில்** மிக **முக்கிய தூன்களில்** ஒன்று சரிந்து **கர்த்தரின் பாதம் போய் சேர்ந்தது.**

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**ஜாமக்காரன்** டாக்டர் **புஷ்பராஜ்**